# போர்வாள்

| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1980 ஐப்பசி 20 | வீச்சு |
| --- | --- | --- |
| 3 | 5—11—49 சனிக்கிழமை | 11 |

ஆசிரியர்கள்:
மணிமொழியார்
இளஞ்செழியன்

1/2 அணா

தொகை ரூ. 5



நம் பொதுச் செயலாளர்

# பயங்கர பலிபீடம்!

## 2

கலியுக பிரம்மதேவர் என்ற பட்டப்பெயர் சூடியவரும், பெரும் புகழ் வாய்ந்த "பூதேவ"ருமாகிய ஆரிய குல தலைவர் கங்குபட்டர் மராட்டியத் தலைநகருக்குள் மாவீரன் சிவாஜியால் மகோன்னதமான வரவேற்புகளுடன் அழைத்து வரப்பட்ட அற்புதமான காட்சியின் மாட்சியைக் கண்ட போது, மராட்டிய மண்டலத்து ஆரியபுரியினர் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும், குதூகலம், குதித்துக் குதித்துக் கூத்தாடத் தொடங்கி விட்டது. அவர்கள் கண்களிலே, களிப்பு ஒளி! அவர்கள் முகத்திலே ஆநந்தத்தின் திருநடனம்! அவர்களுடைய கன்னங்களிலே ஒரு பூரிப்பு! அவர்களுடைய பேச்சிலே ஒரு புதுமுறுக்கு! அவர்களுடைய நடையிலேகூட ஒரு புதுவித ஜோர்! சுருக்கமாகச் சொல்வதானால் அந்த முப்புரிதாரிகள் ஒவ்வொருவரும் ஓர் ஆநந்த சித்திரமாகவே உருமாறி விட்டனர்! அவர்கள்தம் மனம் எனும் வீணையில் மகிழ்ச்சி எனும் மாதரசி மனமோகன கீதம் வாசிக்கத் தொடங்கிவிட்டாள்—சந்தோஷம், அந்த சாஸ்திரம் தாங்கிகளின் சொந்த சொத்தாகிவிட்டது.

உண்மையிலேயே அந்தக் கனபாடிகளின் கூட்டம், அவர்களுடைய வாழ்நாளிலேயே அதுவரை கண்டறியாத ஓர் ஆநந்தத்தை, கங்குபட்டர் மராட்டியப் பிரவேசம் புரிந்த நாளிலே காணலாயினர். அவர்கள் அதுவரை ஒருநாளும் அனுபவித்தறியாத பூரிப்பை, புது மகிழ்வை, கம்பீர உணர்ச்சியை, எமக்கு ஈடு யாருண்டு என்ற சிந்தனையை அன்று அனுபவிக்கலாயினர். "கண்டறியாதன கண்டோம்—இதுவரை ஒருநாளும் கொண்டறியாத உணர்ச்சிகள் கொண்டோம்!" என்பதே அவர்களுடைய அன்றைய கீதமாகிவிட்டது. "கணபதி வயிற்றை"த் தாங்கிக்கொண்டு மிக மிக சிரமத்துடன் ஆடி அசைந்து செல்வதையே நடைப்பழக்கமாக தலைமுறை தலைமுறையாகக் கொண்டிருந்த அவர்கள், அன்று, சற்று நிமிர்ந்த நோக்குடனும் கம்பீரத் தோற்றத்துடனும் கூட நடக்க முயன்றனர்—அவ்வளவு மகிழ்ச்சி அவர்களுக்கு கங்குபட்டரின் ஆரிய பவனியைக் கண்டு!

சிவாஜி கங்குபட்டருக்கு அளித்த ராஜோபசார வரவேற்பை, "யாரோ ஒரு கங்குபட்டருக்குத் தானே மராட்டியத் தலைவன் வரவேற்பளிக்கிறான் — நமக்கென்ன— நம்மையா அவன் பல்லக்கிலேற்றி பவனிவரச் செய்கிறான்—இல்லையே —பிறகு, நாம் ஏன் பூரிப்படைய வேண்டும்" என்ற விதத்திலே அலட்சிய பாவத்துடன் கவனிக்கவில்லை அந்தப் பஞ்சாங்கப் பட்டாளம்! கங்குபட்டருக்கு அளிக்கப்பட்ட மரியாதையை தங்கள் ஒவ்வொருவருக்குமே சொந்தத்தில் அளிக்கப்பட்ட மரியாதையாகத்தான் அவர்கள் கருதினர். வீரன் சிவாஜி காசிபுரம் கங்குபட்டரின் தாளில் வீழ்ந்து பணிந்த ஒவ்வொரு சமயமும், தங்கள் காலிலே அந்தக் கட்டழகன் வீழ்ந்து வணங்குவதாகவே அவர்கள் எண்ணிப் பூரித்திடலாயினர். கங்குபட்டர் கண் அசைப்பால் இட்ட கட்டளைகளை, சிவாஜியும் அவன் ஆணைப்படி அவன் பரிவாரங்களும் ஓடிஓடி நிறைவேற்றும் காட்சியைக் காண நேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவர்கள், தங்கள் கண் அசைப்பைக் கண்டே சிவாஜியும் அவன் தோழர்களும் பணியாற்றுகின்றனர் என்றெண்ணி மகிழ்ந்திடலாயினர்.

கங்குபட்டர் பெறுகிற சிறப்பு—அடைகிற மரியாதை—அனுபவிக்கிற மதிப்பு—கையாளும் செல்வாக்கு—பிரயோகிக்கும் அதிகாரம் யாவும், தங்களுக்காக, தங்கள் இனத்துக்காக, ஆரிய குலத்தவர் மேன்மைக்காக, வர்ணாஸ்ரம வல்லரசின் பிரதிநிதியாக இருக்கிறார் கங்குபட்டர் என்ற காரணத்திற்காக, அவர் காலடியில் வந்து குவிகிறது, ஆகவே, அந்த மரியாதைகளும் வரவேற்புகளும் அவருக்கு அளிக்கப்பட்ட சொந்தமரியாதைகள் அல்ல—பிரம்ம குலத்தின் ஏக போக ஆதிக்கத்திற்கு அளிக்கப்பட்ட காணிக்கைப் பொருள்க
என்பதாகவே மராட்டிய மண்
லத்து முப்புரிதாரிகளால் கருத
பட்டது.

உண்மையும் அது தானே
சிவாஜி இவ்வளவு பிரம்மாண்
மான வரவேற்புகளையும் போராந்
மான மரியாதைகளையும் கங்குப
டர் என்ற சிறிய உருவத்திற்
அபிஷேகம் செய்யத் தொடங்கி
தற்கான அடிப்படைக் காரணமே
அவர் ஆரிய குல தலைவர்—ஆகவே
அவர் பேச்சுக்கு மறுபேச்சு
பேசுவார் பூசுரர் கூட்டத்தில் யா
மில்லை—அவர், ஆரிய தலைவ
என்ற முறையில் மனம் வைத்தா
'சூத்திரன், ஆகவே பட்டம் சூடி
கொள்ள அருகதை அற்றவன்
என்ற நிலையிலே இருக்கும் தன்
க்ஷத்திரியனாக பிரகடனம் செய்
விட முடியும்—அந்த ஆற்றல் அ
ருக்குத்தான் உண்டு என்பதா
சிவாஜி கொண்டிருந்த ஆழ்
நம்பிக்கைதானே! ஆகவே, கங்
பட்டருக்கு முன்னால் குவிக்க
பட்ட மலர்மாலையிலும் புகழ்மா
யிலும் 'பக்தி' மாலையிலும் 'சா
டாங்க நமஸ்கார' மாலைக்குவிய
லும் தங்கட்கும் பங்குண்டு—த
ளின் சார்பிலேயே, தங்கள் இன
தின் சார்பிலேயே, கங்குபட்
இந்த மரியாதைகளை ஏற்கிற
என்று மராட்டிய ஆரியர்க
எண்ணமிட்டதிலே தவறென்
இருக்கிறது?

"நீ ஓர் சூத்திரனப்பா—சூத்தி
னுக்கு முடிசூடும் உரிமை கிடைய
தப்பா—வீணாக ஏனோ நீ அலைகி
யப்பா—வேண்டாமப்பா வீ
முயற்சி விட்டுவிடப்பா"—என்
தாக, மராட்டிய நாட்டுப் பிரா
மணீயம் சிவாஜியைப் பார்த்
மிரட்டிய நேரத்தில், "யாரைய
நீ என்னைத் தட்டிப் பேச
எங்கிருந்து வந்தீர் நீர் சூத்திர
என்றென்னை ஏச! மராட்டிய மண்
டலம் நான் கட்டிய கோட்டை
அதை நான் ஆள்வதே சரியா
ராஜ பாட்டை, உமக்கென்ன உ
மை இதற்குக்கூற ஓட்டை என்
மடக்கிப் பேச முடியவில்லை

[15-ம் பக்கம் பார்க்க]

# கொளுத்திவிட்டார் கொடும்பாவி!

★

## தீர்ந்துவிட்டது அவர் வேலை!

★

"சேரமான்"

"சேரமான்! சேரமான்! ஏ, சேரமான்! எழுந்திரப்பா! இன்னுமா தூங்குகிறாய்? பொழுது விடிந்து எவ்வளவு நேரம் ஆகிவிட்டது தெரியவில்லையா?" என்ற பலமான சத்தம் கேட்டு ஆழ்ந்த தூக்கத்தை அணைத்துக் கொண்டிருந்த நான் வாரிச் சுருட்டிக் கொண்டு கதவைத் திறந்தேன்—**வஞ்சிக்கோ**, என் நண்பன், அங்கே நின்று கொண்டிருந்தான். வஞ்சி, குறும்புக்காரன். வஞ்சி வந்து விட்டான் என்றால், கேலியும் கிண்டலும் குத்தலும் நையாண்டியும் நம்மருகே வந்து விட்டன என்று பொருள். ஆமாம், குறும்பு, வஞ்சியுடன் கூடப்பிறந்த "சொந்த சொத்து"! வஞ்சியை, கதவருகே கண்டதும், நான் கேட்டேன்.

"நீதானா, வஞ்சி, கதவைத் தட்டினாய்? நான் என்னமோ என்று பயந்தே போய் விட்டேனே!"

"பயப்படுவதும் பாசாங்கு செய்வதும் பிறகு ஆகட்டும் சேரா, இப்பொழுது நீ உடனே புறப்பட்டாக வேண்டும். உன்னைக் கையோடு அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்றுதான், நான், இவ்வளவு காலையில் புறப்பட்டு வந்தேன். தெரிகிறதா? புறப்படு, சீக்கிரம்! உம்! தாமதம் செய்யாதே!"

"எங்கே போக வேண்டும், வஞ்சி?"

"சொல்ல மாட்டேனா அதை! புறப்படு நீ முதலில்! பிறகு கூறுகிறேன் போக வேண்டிய இடத்தையும், நீ செய்ய வேண்டிய பணியையும்!"

"ஊஹூம். முடியாது. முதலில் நீ போக வேண்டிய இடத்தைச் சொன்னால்தான் நான் புறப்படுவதற்கு முயற்சி செய்வேன். ஆமாம், ஆமாம், தெரிகிறதா?"

"என்ன சேரா, இவ்வளவு பிடிவாதம் செய்கிறாய்? காரியமில்லாமலா உன்னை அழைப்பேன்? ஒரு முக்கியமான விழா ஏற்பாடு செய்திருக்கிறேன்—"கொடும்பாவி கொளுத்தும் விழா"—அதற்குத்தான் உன்னை அழைக்கிறேன். புறப்படப்பா சீக்கிரம் புறப்படு! மணியாகி விட்டது"

"வஞ்சி! இதோ பார்! உனக்கென்ன பைத்தியமா பிடித்து விட்டது! கொடும்பாவியாம்! கொளுத்துவதாம்! விழாவாம்! அதற்கு என் வருகையாம்! என்னப்பா இதெல்லாம்! எனக்கு நிறைய வேலை இருக்கிறது! நீ பிறகோர் சமயம் வா, சாவகாசமாய்ப் பேசலாம்!"

"இரு இரு சேரா, பட படவென்று பேசாதே! நான் கேட்பதற்கு மட்டும் பதில் கூறு. பிறகு வருவதும் வராததும் உன் விருப்பம். நம் நாட்டில் கையெழுத்துகூடப் போடத் தெரியாதவர்கள் 100 க்கு 85 பேருக்குமேல் இருக்கிறார்களா இல்லையா?"

"ஆமாம், இருக்கிறார்கள்!"

"அவர்களுடைய அறியாமையைப் போக்கி, கல்வித் திருவிளக்கு, அவர்களுடைய வாழ்க்கை வானிலே ஒளி வீசும்படி செய்ய வேண்டியது நம்போன்ற படித்த பட்டதாரிகளின் கடமையா இல்லையா?

"ஆமாம், நிச்சயமாக நம் கடமைதான்!"

"ஆகவேதான் நான் கொடும்பாவி கொளுத்துகிறேன், இது கூடத் தெரியவில்லையா உனக்கு?"

"என்ன வஞ்சி மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சிப் போடுகிறாய்? அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன சம்பந்தம்? கொடும்பாவி கொளுத்துவதற்கும் கல்வியின்மையைப் போக்குவதற்கும் எப்படியப்பா தொடர்பு இருக்க முடியும்? கல்வியறிவு பரவ வேண்டும் என்று நாம் ஆசைப்படுவதற்குக் காரணமே கல்வி ஒளி பரவினால் தான் கொடும்பாவி கொளுத்துவது போன்ற மூட நம்பிக்கைகள் ஒழியும் என்பது தானே! அப்படியிருக்க, கல்வியறிவை வளர்ப்பதற்காகத்தான் கொடும்பாவி கொளுத்துகிறேன் என்கிறாயே, இது என்ன பொருத்தமற்ற வாதம்!"

"சேரா, நான் கூறினால் உனக்கு கேலியாகத்தான் இருக்

கும். என்ன இருந்தாலும் நான் ஏழைதானே! ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா? யாராவது பெரிய மனிதர்கள் சொன்னால் ஒப்புக் கொள்வாய்! சரி, இருக்கட்டும், இதோ இந்தப் பத்திரிகையையாவது பார்" என்று சொல்லிக் கொண்டே, வஞ்சி, "ஹிந்து" பத்திரிகை ஒன்றை தன் சட்டைப் பையிலிருந்து எடுத்து வீசினான் என் முன்னால்.

படித்துப் பார்த்தேன், பிறகு தான் தெரியவந்தது எனக்கு, வஞ்சி, இவ்வளவு நேரம் பேசியதும் வெறும் குறும்பு என்று! என்னதான் இருந்தாலும் வஞ்சிக்கு இவ்வளவு குறும்பு கூடாதுதான்!

ஒரு முறைக்கு இருமுறை, மும்முறை, நான்கு முறை படித்தேன் பத்திரிகைச் சேதியை. அதை நான் படித்துப்படித்து, திகைப்பும் வியப்பும் அடைய அடைய வஞ்சி, என்னைப் பார்த்து, கேலிப் புன்னகையுடன் "பார்த்தாயா சேரா பார்த்தாயா? என்னைக் கேலி செய்தாயே வீணன் என்று, இப்போது பார்த்தாயா" என்று கேட்டபடி இருந்தான்.

"ஹிந்து", மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தது:—

"டில்லி நகராண்மைக் கழகத்தினரால் நடத்தப்படவிருக்கும் முதியவர் கல்வி நிலையத்தை, இந்திய சர்க்காரின் கல்வி அமைச்சர் மௌலானா ஆசாத் இன்று திறந்துவைத்தார்.

"அப்போது, அவர், இந்தியாவின் சுதந்தரம் எவ்வளவு காலம் நீடித்துநிற்கும் என்பது இந்திய மக்கள் அனைவரையும் எவ்வளவு சீக்கிரம் நாம் கல்வியறிவு படைத்தவர்களாக ஆக்குகிறோமோ அதைத்தான் பொறுத்திருக்கிறது என்றும், உலக மன்றத்தில் இந்தியா பெறக்கூடிய மதிப்பின் தரமும் இதே பிரச்சினையைத்தான் பொறுத்திருக்கிறது என்றும் விரிவாகச் சொற்பொழிவாற்றினார்.

"தொடர்ந்து பேசுகையில், மௌலானா, இந்திய மக்களில் முக்கால்வாசிப்பேர், எழுதவும் படிக்கவும் மட்டும் கற்பிக்கும் ஆரம்பக் கல்வியைக்கூடக் கற்றறியாமல், முழு அறியாமைப் பேரிருளில் கிடந்து தவிக்கிறார்கள், இந்த இழிநிலையை உடனடியாக நாம் மாற்றியாகவேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார்.

"கூறிவிட்டு, ஒரு பெரிய தீவட்டியைக் கொளுத்தி, மேடையின் ஒரு புறத்தில் செய்து வைக்கப்பட்டிருந்த "கறுப்புத் தலை கொடும்பாவி" ஒன்றை அந்தத் தீவட்டியினால் எரிமூட்டிச் சாம்பலாக்கினார்.

"கறுப்புத்தலை கொடும்பாவி இருள்மிகுந்த அறியாமையைக் குறிப்பது என்றும், தான் கையிலேந்திய தீவட்டி அறிவு ஒளியைக் குறிப்பது என்றும், அறிவு ஒளியை நாடெங்கும் பரப்பி அறியாமை இருளை அகற்றவேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே, தான், இந்தச் செயலைப் புரிந்ததாகவும் கனம் மௌலானா விளக்கம் பகர்ந்தார்."

கல்வி அமைச்சர் மௌலானா கொடும்பாவி கொளுத்திய அற்புதத்தை பூரிப்புடன் இது போலப் புகன்றுகொண்டிருந்தது "ஹிந்து." பார்த்தேன், படித்தேன். பிறகு, எனக்குக் கொஞ்சம் வெட்கமாகவே இருந்தது எதிரே நின்றுகொண்டிருந்த என் நண்பன் வஞ்சிக் கோவின் முகத்தைப் பார்க்க. அவனை நான் கேலி செய்தேனே கொடும்பாவி கொளுத்துவதற்கும் கல்வியின்மை தொலைவதற்கும் உள்ள தொடர்பு கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் உள்ளது போன்றதுதான் என்று இதோ கனம் கல்வி அமைச்சரே புரிந்திருக்கிறாரே இந்த கருத்தற்ற காரியத்தை! வஞ்சிக்கு நான் இப்போதென்ன பதில் கூறுவது!


"என்னப்பா சேரா, நீண்ட நேரமாகப் பேசாமல் இருக்கிறாய்? மௌன விரதம் பூண்டு விட்டாயோ?" — வஞ்சி பேச ஆரம்பித்தான். வெட்கமும் துக்கமும் என்னை வாட்ட ஆரம்பித்தன.

"கேலி செய்யாதே வஞ்சி! அமைச்சரின் போக்கு என்னை ஆழ்ந்த சிந்தனைக் குள்ளாக்கி விட்டது. நீயும் நானும் நம் போன்ற ஏனைய பகுத்தறிவு வாதிகளும், நாடெங்கும் சுற்றிச் சுற்றி கொடும்பாவி கொளுத்துவது — மந்திரத்தால் எதிரியை மயக்குவது — பில்லி சூன்யம் வைப்பது — பேய் பிசாசு என்று பயப்படுவது — மழை வர யாக யோகாதிகளை நடத்துவது — வருண பகவானுக்கு வந்தனை வழிபாடுகளை நடத்திப் படையலிட்டுப் பூசை போடுவது முதலாகிய செயல்கள் எல்லாம் மூட நம்பிக்கையின் பாற்பட்டவை, இத்தகு செயல்கள் நம் நாட்டை விட்டு அகன்று ஒழியும் நாளே நமக்கு நன்னாள் என்று ஓயாமல் பிரசாரம் செய்து வருகிறோம். ஆனால் கல்வியமைச்சர் என்ற பட்டமும், பேரறிவாளர் என்ற புகழ்மாலையும், சிறந்த கல்விமான் என்ற பாராட்டுதலும் வாய்க்கப்பெற்ற கனம் மௌலானா ஆசாத் சாகிபோ, பலர் முன்னிலையில் ஒரு கொடும்பாவியைத் தானே கொளுத்திக் காட்டி, அந்த மூட நம்பிக்கைக்குப் புத்துயிரும் புதுவாழ்வும் தருகிறார். அமைச்சர்கள் போக்கு இப்படியிருந்தால், வஞ்சி, நம் பணி

(11ம் பக்கம் பார்க்க)



# கட்டில் சேராத கடிதம்



பெரியார் இராமசாமி அவர்கள், ஈரோடு

*எங்கள் இருதயத்தில் குடியேறி அங்கே இன்னமும் வீற்றிருக்கும் எங்கள் முன்னாள் தலைவரே,*

வணக்கம். இங்கே யாவரும் நலம் தான். அங்கே தாங்கள் நலம் தானா? தங்கள் உள்ளமும், உடலும், கட்சியும், கட்சிப் பணியும் நலம் தானா? தங்களிடமிருக்கும் இயக்கச் சொத்தும் விடுதலை இதழும் நலமாக இருக்கின்றனவா? தங்கள் வாழ்க்கைத் துணை நலம் உயர்திரு மணியம்மையார் அவர்கள் நலமாக இருக்கின்றார்களா? தங்கள் மூத்த திருமகனாரும் எங்கள் 'அருமை' அண்ணருமாகிய-ஆனால் தங்கள் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் மட்டும் இன்றுவரை, இந்த வினாடிவரை, பெறாத நிலையிலே இருக்கும் நண்பர் குருசாமி நலம் தானா? "தகாத காரியம் தான் செய்துவிட்டார் தந்தை—சகிக்கத்தான் முடியவில்லை—வெட்கம், உள்ளத்தை வாள் போல் அறுக்கத்தான் செய்கிறது—திருமணம்! அதை ஒரு கணம் எண்ணினாலே மனம் பதறத்தான் செய்கிறது—என்றாலும் என் செய்வது-இவரைத் தனியாக விட்டு விட்டு எஞ்சி நிற்கும் நாங்கள் இரண்டொருவரும் கூட 'ரோஷம்' காரணமாக வெளியேறி விட்டால், பிறகு, இவர், இந்தத் "திருமணத்"தைவிட இன்னமும் மோசமான தவறைச் செய்யாதபடி பார்த்துக்கொள்ள யார் இருப்பார்கள்—அதற்காகவாவது நாங்கள் இங்கே இருக்க வேண்டாமா என்று கூறிக்கொண்டு தங்களுடனே தங்கிவிட்ட அந்தச் சில ஆதரவாளர்களும் நலம் தானா? அனைவர் நலத்தையும் அருள் கூர்ந்து தெரிவியுங்கள். இந்தத் 'துரோகி'(?) தமக்குக் கடிதம் தீட்டுவதாவது, இவனுக்கு நாம் பதில் போடுவதாவது என்று இருந்து விடாதீர்கள். என்ன தான் நீங்களும் நாங்களும் தனித் தனிக் குடும்பம் அமைத்துக் கொண்டு விட்டாலும், எவ்வளவு தான் உங்கள் எதேச்சாதிகாரப் போக்கு எங்களுக்குப் பிடிக்காமல் எங்களுடைய நேர்மையும், தூய்மையும், ஜனநாயகப் பண்பும் தங்களுக்குப் பிடிக்காமல்இருந்தாலும், எத்தனை ஆயிரம் முறைதான் நீங்கள் எங்களை சதிகாரர்கள் என்று சபித்தாலும்—துரோகிகள் என்று தூற்றினாலும், எவ்வளவு கடுங் கோபத்துடன்தான் நீங்கள் எங்களை பழிபாவத்திற்கஞ்சாத படுபாவிகள் என்று பழங்கால வைதிகப் பாணியில் எதுகை மோனை நயம் தொனிக்க வீணை ஏசினாலும்; மிக மிகச் சாமான்யர்களும் மிக மிக எளியவர்களுமாகிய எங்கள் மீது எவ்வளவு தான் வெறுப்பும் துவேஷமும் பகைமையும் பொச்சரிப்பும் தங்கள் உள்ளத்தில் நடமாடினாலும், தாங்கள் எங்கள் தந்தையல்லவோ—நாங்களும் நீர் பெற்ற மதலைகள் அல்லமோ—ஆகவே தங்கள் நலமறிந்து மகிழ வேண்டும் என்ற பாசம், பற்று, பிரேமை எங்களுக்கு இல்லாமலா போகும்? தாங்கள் வேண்டுமானால் எங்களை வேம்பென வெறுக்கலாம், பிறவிப் பகைவர் போலெண்ணித் தாக்கலாம், ஒழித்துக்கட்டிவிடுகிறேன் இந்த ஓட்டை உடைசல்களை என்று கர்ஜிக்கலாம், சீச்சீ—இதுகள் என் மதலைகள் அல்ல--மண்ணாங்கட்டிப் பொம்மைகள் என்று 'முழக்கம்' எழுப்பலாம்—ஆனால் நாங்கள் ஒரு நாளும் தங்களை மறக்கமாட்டோம், தந்தையே! ஊராரின் உறுமல், உற்றார் உறவினரின் பகைமை, அண்ணன் தம்பிகளின் கோபம், அருமை அன்னையின் கண்ணீர். பெற்ற தந்தையின் 'உருப்படமாட்டாயடா பயலே' என்ற சாபம், உண்மை நண்பர்களின் உதவாக்கரைப் பட்டம்,—இவ்வளவு பாரமான சுமைகளையும் தாங்கிக் கொண்டுதான் நாங்கள் ஓய்வு ஒழிவின்றி கட்சிப் பணி புரிந்தோம்—அதை நீங்கள் மிகச் சுலபமாக மறந்துவிட்டீர்கள்—மிகச் சுலபமாக மறந்துவிட முடிகிறது தங்களால்—ஆனால் அதுபோல, நீங்கள் ஆற்றிய அரும்பணியை மறந்துவிட எங்களால் ஆகாது, தலைவரே! எங்களிலே பலர் கரம் இழந்திருக்கிறோம் கால் இழந்திருக்கிறோம், கல்லடி பட்டு குருதி சிந்தியிருக்கிறோம், தடியடி பட்டு தாளிலும் தோளிலும் தழும்புகள் ஏற்றிருக்கிறோம், வேறு துறையில் சென்றிருந்தால் வளமாக இருந்திருக்கக் கூடிய வாழ்க்கையை இங்கே வந்ததால் வறுமையின் இல்லமாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம், கட்சிப் பணி புரிவதிலேயே காலம் முழுதும் செலவாகிவிட்ட காரணத்தால் எங்கள் குடும்பங்கள் பல பட்டினிப் பாறையிலே மோதுண்டு சுக்குநூறாகியிருக்கின்றன. எங்களிலே பலருக்கு, கட்சிக்காக உழைத்து உழைத்து இளமையிலேயே முதுமை தட்டிவிட்டிருக்கிறது—மாடாக உழைத்ததாலே உடல் வெறும் ஓடாகிவிட்டிருக்கிறது, பகலெல்லாம் சர்க்கார் காரியாலயத்திலேயோ, பள்ளிக்கூட அறையிலேயோ, பஜார் வீதியிலேயோ, ஜவுளிக் கடையிலேயோ குமஸ்தாவாகவோ ஆசிரியராகவோ வாழ்க்கைப் பணியாற்றிவிட்டு, அதில் கிடைக்கும் சிறு ஊதியத்தை மனைவி மக்களிடம் வீசி எறிந்து இதை வைத்துக்கொண்டு எப்படியாவது குடும்பத்தை நடத்துங்கள் என்று கூறிவிட்டு, இரவெல்லாம் பிரசாரம் புரிந்து, இயக்கம் எனும் கழனியை உழுது பயிரிட்டவர்கள் எத்தனையோ பேர்! இப்படியெல்லாம் ஓய்வு ஒழிவின்றி பாடுபட்டு இயக்கத்தை வளர்த்த எங்கள் தூய்மையை துரோகம் என்றும், தொண்டினை துடைநடுங்கித்தனம் என்றும், நேர்மையை நாச கால புத்தி என்றும், தியாகத்தை திருட்டுத்தனம் என்றும் கூற எப்படித்தான் தங்கள் உள்ளம் துணிகிறதோ, நாங்கள் அறியோம், ஆனால் அதே 'பாணி'யில், தங்களுடைய பகுத்தறிவுப் பணியின் பெருமையை அருமையை குறைத்துப் பேசவோ, தங்கள் உழைப்புத் திறத்திற்குச் 'சொட்டு' சொல்

(8-ம் பக்கம் பார்க்க)




தொடர்கதை:

பதிமூன்றும் பகுதி

## நெஞ்சில் எரிமலை

காட்டில் இரவு நேரத்தில் காற்று மிகவும் குளிர்ந்து வீசியது. குழந்தைகளின் மெல்லிய உடல்கள் சிலிர்த்தன! பச்சைக் குழவிகள் பசியினாலும் குளிரினாலும் வீறிட்டு அழுதன. அரசனது ஆட்களோ அருகில் வந்து விட்டனர்! குழந்தைகளோ, இருக்குமிடத்தைச் சுலபத்தில் அறிந்து கொள்வதற்கு வசதியாக, கோவெனக் குரல் எடுத்து அழுகின்றன! ஒளிந்து ஓடினால் கண்டு கொள்ளும் விதத்தில், வெண்ணிலா வேறு வானில் பிரகாசமாக ஒளி வீசுகிறது! இந்த நிலவரத்தில் நான் என்ன செய்வது? எப்படித் தப்புவது? சின்னமலர்வாய்க் குழந்தைகளைச் சித்திரவதைக் குள்ளாக்காமல் காப்பாற்றத் தான் வழி ஏது? சத்துருக்களிடமிருந்து தப்ப முடியாத சங்கடமான நிலைமை! இப்படி எண்ணங்கள் ஓர் நொடியில் என் மனதில் மின்ன விட்டன!

உதிரமும் உயிரும் என் உடலில் இருக்கும் மட்டும், பசும்பொன் வார்ப்படங்களை—அன்புச் சித்திரங்களை—நீலச் சின்ன மணிக் கண்ணிமைக்கும் ஆசைக் குழந்தைகளை—எதிரிகள் எடுத்துச் செல்ல விடக் கூடாதென்று, சங்கற்பம் செய்து கொண்டேன்! நீதியையும் நேர்மையையும் இழந்த மன்னனது ஆட்களோடு நான் நிராயுதபாணியாக இருந்தாலும் எதிர்த்தே தீருவது என்ற முடிவுக்கு வந்தேன்!

புல் தரையின் மேல் துணியை விரித்து, புத்தம் புது சின்ன உடல் சிறாரைப் படுக்க வைத்தேன்! களிப்பில்கடைந்தெடுத்த கண்மணிகளைக் கடைசி முறையாகப் பார்த்து விடலாமென்று இரு கண்களையும் அகலத் திறந்து உற்றுப் பார்த்தேன்! கலங்கின கண்கள்! கால்களை உதைத்துக் கொண்டு, கைகளை ஆட்டிக் கொண்டு, அனிச்ச மலரின் இதழினும் மிருதுவான சிறிய உதடுகள் வேகமாக அசையக் கதறி அழுதன குழந்தைகள்! கண்ணீரால் மறைக்கப் பட்டது என் பார்வை!

திடுக்கிட்டு எழுந்தேன், "இசை வாணரே!" என்ற குரலோசை கேட்டதும்! "முடியாது, முடியாது! குழந்தைகளை மட்டும் தரமுடியாது! என்னைக் குத்தினாலும் வெட்டினாலும் அல்லது கொன்றே போட்டாலும் குழந்தைகளைக் கொடுக் முடியாது!" என்ற பயங்கரமான உரத்த குரலில் கூச்சலிட் டேன்!

வந்த வீரர்களைப் பார்த் தேன்! தாக்கத் தயாரானேன்! அவர்கள் மௌனமாக நின்றி ருந்தனர்! சிறிது நேரம் வ ஒருவரை ஒருவர் பார்த்தபடி யே இருந்தோம். வீரர் இரு ரும் வணக்கம் செய்தனர்! நான் அவர்களை நம்ப வில்லை! "நீங்கள் யாரென்று எனக்கு நன்கு தெ யும். சாகசமாக நடித்து, சா டிக்கக் குழந்தைகளைத் தட்டிப் பறித்துப்போக வந்திருக்கிறீ கள்!" என்று ஆத்திரத்தோ கூறினேன்.

"இசைவாணரே, எங்களை நம்புங்கள்! நாங்கள் இளவர ரின் ஆட்கள்!"

"இளவரசரின் ஆட்களா நீங்களா?"

"ஆமாம்!"

"எப்படி நான் நம்புவது?"

"இதோ, அவர் தந்தனுப் இருக்கும் ஓலை!"

அருகேவந்து கடிதத்தை தந்தனர்! ஆவலோடு வாங்கி படித்துப் பார்த்தேன்!

"மலர்க்கோதையும் அவ அண்ணியும் கைது செய்ய பட்ட செய்தி, இவ்வளவு வி வாகவா இளவரசருக்குத் தெ ந்து விட்டது?"

"ஆமாம்!"

"எப்படி?"

"அரண்மனையில் நடமா வன இளவரசரின் கண்களு காதுகளும் தானே!"

"அப்படி என்றால்?"

"ஒற்றர்கள்! நம் ஆட்க பலர் அரசரது ஆட்களை போல நடித்துக் கொண் உலவி, புலனறிந்து தெரிவி கிறார்கள்!"

"அப்படியா?"

"ஆமாம்! புறப்படுங்கள்! இளவரசர் இருக்குமிடத்திற்குச் செல்லலாம்!" என்று வீரர் கூறியதும், அவ்விடத்தை விட்டுச் சென்றோம்.

இளவரசரும் அவரது வீரர்களும் இருந்த இடத்தை அடைந்தோம். பொழுதும் புலர்ந்து விட்டது.

எங்களைக் கண்டதும் இளவரசர் ஆவலோடு எழுந்தார். வீறிட்டு அழுத ஓவியக் குழந்தைகளை விரைந்து வந்துவாங்கி, தன் பரந்த மார்போடு அணைத்துக் கொண்டார். வீரத்தின் ஒளி வீசிக்கொண்டிருந்த அவரது விழிகளிலிருந்து கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன!

"மருதா! வா, இப்படி! உட்கார்" என்றார். அருகே அமர்ந்தேன். வாளும் வேலும் சாணைபிடிக்கும் சப்தம் என் காதில் விழுந்தது; அடலேறுகள் போன்ற போர்வீரர்கள் அணி அணியாக அங்கு மிங்கும் செல்வதும் வருவதுமான காட்சி என் கண்ணில் பட்டது! மன்னரோடு போர் தொடுக்க இளவரசர்—தடுக்கி விழுந்த தந்தையைத் தாக்க தனயன்—தயாராகிவிட்டார் என்பதைப் புர்ந்து கொண்டேன்! அளவற்ற ஆணவம் பிடித்த ஆரியரின் பிடியிலிருந்து பாண்டிய நாடு விடுதலை பெறுமென்று எண்ணி ஆநந்தித்தேன்.

இளவரசரைத் திரும்பிப் பார்த்தேன்! அப்பொழுதுதான் அவர் கண்ணீரைத் துடைத்துக்கொண்டிருந்தார்!

"மருதா!"

"இளவரசே, கூறியது சரியாகிவிட்டதா?"

"நீ சொல்லியதா?"

"ஆம்!......போரிடவேண்டும்! சூழ்ச்சியை வெட்டி வீழ்த்த வேண்டும்! ஊரைக் கெடுத்துக் கொள்ளையிடும் வஞ்சகர் கூட்டம் பூண்டோடு பூண்டாக அழியும் மட்டும், உணவும் உறக்கமுமின்றிப் போரிட்டாக வேண்டும்! கன்னித் தமிழ் நிலத்தின் கழுத்தை நெரித்துக் கொல்லும் கசடர்களுடன் போரிட வேண்டும்!......என்று அன்று கூறினேனே நினைவிருக்கிறதா?"

"ஆமாம்! மருதா, இப்பொழுதும் சொல்கிறேன்—உள்ளத் தூய்மையோடு உரைக்கின்றேன்—போரை நான் விரும்பவில்லை! ஆனால் போரிட்டு ஆகவேண்டிய நிலைமைவந்து விட்டது!......... பத்து மாதம் சுமந்து பெற்று, பாசத்தோடு வளர்த்த என் தாய் சிறையில்: வேதனையால் தேம்பும் அன்னையின் குரல்! உடன் பிறந்தஎன் ஒரே தங்கையும் சிறையில்: சோகத்தால் துடி துடிக்கும் அவள் உள்ளம்! உயிரோடு உயிராகக் கலந்துவிட்ட என் மனைவி சிறையில்: துக்கத்தால் அவள் வடிக்கும் கண்ணீர்! கிடைத்ததற்கரிய அன்னை, அன்பு தங்கை, ஆசை மனைவி இவர்கள் மட்டும் சிறையில் சிக்கி வாடினால், நான் கண்ணீர் விட்டு அழுதிருப்பேன்! தனிப்பட்ட என் சொந்த துக்கமென்று சகித்துக் கொண்டு சும்மா இருந்து விட்டிருப்பேன்! ஆனால் என் தாய்நாடு, பாண்டிய நாடு அல்லவா சிறையில் அகப்பட்டுக் கொண்டது! தெளிவு பெற்ற நாட்டுமக்களல்லவா கதறுகிறார்கள், ஆரிய ஆட்சி பரவுகிறதே, அதற்குக் கீழ்ப்படிந்து அஞ்சி அடங்கி அடிமை வாழ்வு வாழலாமா என்றல்லவா வீரர்கள் பதறி அழுகின்றார்கள், அன்னிய கலாச்சாரம் படைஎடுத்து விட்டதே, இயற்கையையே வணங்கிவந்த தமிழர்களிடையே காட்டு மிராண்டித்தனமான கற்பனைக் கடவுள்கள் புகுத்தப் பட்டு வருகிறதே, அரண்மனையிலும் உருவம் கொண்ட கடவுளுக்கு உருவாகி விட்டதேகோயில், இதுதகுமா, தமிழர்கள் தன்மானத்தோடு இனிவாழ முடியுமா! வேதனையால் அரசி வாடிட, வேற்று இனத்துப் பெண் வேந்தனின் அருகே ஆடம்பரத்தோடும் அகங்காரத்தோடும் அமர்வது முறையா, இது அடுக்குமா, இந்த வஞ்சகத்தை வீழ்த்தி நாட்டைக் காக்க பாண்டிய வீரர்கள் அவ்வளவு பேருமா மாண்டு மடிந்து விட்டார்கள், ஒருவர் கூடவா உயிரோடு உணர்ச்சியோடு, மானத்தோடு இல்லையா என்றல்லவா அறிஞர்கள் சோகத்தோடு கேட்கின்றார்கள்! மன்னர், மக்களை அவமதிக்கிறார். அறிஞர்களின் சொல்லைக் கேட்க மறுக்கிறார். வீரர்களைத் துச்சமெனத் தூற்றுகிறார்! நாட்டு மக்கள் நலிய, நாடோடிகளுக்கு ஏற்றமளிக்கிறார்! எக்களிப்போடு ஏமாற்றுச் சூரர்கள் உலவுகிறார்கள்! உழைப்பாளிகள், ஊருக்குச் சொந்தக்காரர்கள், உதிரக் கண்ணீர் கொட்டுகிறார்கள்! அவர்கள் உள்ளம் பதறுகிறது! அரசர் அவர்கள் நெஞ்சல் எரிமலையை ஏற்படுத்தி விட்டார்! எரிமலை கனல் கக்கத் தொடங்கி விட்டது! போர்! போர்! ஆம், நீ கூறினாயே அதே போர்தான், வந்து விட்டது!.........மருதா, இனி இக்குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு உன்னுடையது! நீ வேறு எதனையும் குறித்துக் கவலைப்படாதே, இந்த இரு கண்மணிகளை மட்டும் பத்திரமாகப் பார்த்துக் கொள்! மற்றவற்றை நான் கவனித்துக் கொள்கிறேன் இன்றிரவே குழந்தைகளோடு பாண்டிய நாட்டின் எல்லையைத் தாண்டி சென்றுவிடு! குதிரையும், உடன்வர இரு வீரர்களும் தயாராக இருக்கிறார்கள்!" என்று இளவரசர் பேசி முடித்தார்.

"சரி" என்றேன்.

(தொடரும்)

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஐப்பசி 20
5—11—49 சனிக்கிழமை

# நவம்பர் 7

அடுத்த திங்கட்கிழமை நவம்பர் 7ம்நாள்! பாட்டாளிகளின் புரட்சி முழக்கம் பாரைக்குலுக்கிய நாள்! கொடுங்கோலன் ஜார் வீழே சாய்ந்த நாள்! வெற்றி வீரன் லெனின் வாகை சூடிய நாள்! உழைப்பவர் உலகு—சோவியத் ரஷ்யா உருவான நாள்! நமக்குத்தேனினுமினிய நாள்—தீங்கரும்பு போன்ற நாள்! இது எனது என்னும் கொடுமை ரஷ்யாவிலே, மரணதண்டனை பெற்ற நாள். பொதுவுடைமை பூமி பரிணமித்த நாள்! நன்னாள்— திருநாள்— விழாநாள்—மமதை மாய்ந்த நாள்-மதோன்மத்தர் வீழ்ந்த நாள். 1917ம் ஆண்டு நவம்பர் 7ம் நாளன்று லெனின், துவக்கிய மாபெரும் புரட்சி வெற்றிபெற்றது, அதை நினைப்பூட்டும் நாள் இதோ வருகிறது- இந்த நன்னாளிலே மாவீரன் லெனினைப் போற்றுவதோடின்றி, இன்பத் திராவிடத்திலேயும் சமரட மணம் கமழும் நாள் விரைவில் வரவேண்டும் என நாம் விரும்புவோமாக. **பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம் புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்'** என்னும் **புரட்சிக்கவிஞர்** பொன்மொழியை முன்வைத்து, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அனைவரும் அன்று உறுதியுரை பகர்வாராக' வாழ்க தீரன்லெனின் பெயர்! வெல்க அவன் கொள்கைகள்!

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லவோ எங்களால் முடியாது, முதுபெரும் கிழவரே! தாங்கள் எங்களை மறந்து விட்டாலும், எங்களால் தங்களை மறக்க முடியாது—அத்தகு நன்றியற்ற தன்மையை நாணயமற்ற போக்கை எங்களிடம் ஒருபோதும் தாங்கள் காணமுடியாது-நிச்சயம் முடியாது.

இந்த இரண்டு மாத காலமாக எங்களைப் பார்த்து சுயநலமிகள் சுயநலமிகள் என்று ஈராயிரம் முறைக்குமேல் ஏசல் அந்தாதியை வாசித்திருக்கிறீர்களே, உங்களை ஒன்று கேட்கிறேன், கோபம் கொள்ளாமல் பதில் மட்டும் கூறுங்கள், இந்தத் திருமண நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னால் எங்களை ஈராயிரம் முறை அல்ல—எத்தனையோ ஆயிரம் முறை இரத்தினங்கள் மாணிக்கங்கள் மாணவமணிகள் வாலிபவீரர்கள் என்று பாராட்டிப் பாராட்டிப் பேசியிருக்கிறீர்களே, பழைய 'குடி அரசு' வால்யூம்களையும் 'விடுதலை' ஏடுகளையும் புரட்டினால், அடுக்கடுக்காக இருக்கின்றனவே அந்தப் பாராட்டுமொழிகள் அவை எல்லாம் என்னவெறும்பொய்யா? '**என்னங்க அண்ணாத்துரை! தாங்கள் உடனே வந்துகட்சி வேலையைத் தொடர்ந்து செய்யாவிட்டால் நான் கட்சியை விட்டு விலகிவிடுவேன்**' என்று அண்ணா அவர்களுக்கு, தாங்கள் ஒருமுறை கடிதம் எழுதியிருக்கிறீர்களே, மறந்துவிட்டீர்களா—இதை விடவா அண்ணாத்துரைக்கு ஒரு பெரிய பாராட்டு கிடைக்கமுடியும்? ''இப்போது நெடுஞ்செழியன் பேசியதைக்கேட்டு அப்படியே மயங்கி மெய்மறந்து போய்விட்டேன்—இப்படிப்பட்ட தன்னலமற்ற அருமையான மாணிக்கங்கள் இரு
கும்போது எனக்கென்ன குறை?''
என்று சென்னை சினிமா சென்ட்
ரல் மாநாட்டிலே அகமும் முகமு
மலர, கண்களிலே ஆநந்த ஒ
வீச வீச, பாராட்டுமொழி பகர்
தீர்களே, நினைவில்லையா? ''இந்
நடராசன் மட்டும் இந்தக் கட்சிக்கு
வராமல் காங்கிரசிலேயே
தொடர்ந்து இருந்திருந்தால் இ
நேரம் ஒரு மந்திரியாக ஆகியிரு
விட்டாலும் குறைந்த பட்சம் ஒ
எம். எல், ஏவாகவாவது ஆயிருக்க
மாட்டாரா? எதற்காக அவர் அந்
சுகபோகத்தையெல்லாம் விட்
விட்டு இந்த அன்னக் காவடி
கட்சியிலே வந்து இப்படி மாடா
உழைக்கிறார்—எல்லாம் உங்கள்
நன்மைக்காகத்தானே — இல்லை
என்று யாராவது சொல்லமுடி
யுமா'' என்று பற்பல பொது
கூட்டங்களிலே வாதாடியிருக்கிறீ
களே—கவனமில்லையா? அன்பு
கனையும் ஆசைத் தம்பியையு
அன்பர் சம்பத்தையும் ஏனையோ
ரையும் அவர்களுடைய அரி
உழைப்பை முன்னிட்டு எத்
தனையோ மாநாடுகளில் புகழ்
திருக்கிறீர்களே—நீங்கள் மற
திருந்தாலும், நாடு மறக்கவில்
லையே அந்தப் புகழுரைகளை
''இப்போதுதான் என்று நினைக்க
தீர்கள்—சிறு பிள்ளையாய் இருந்
காலத்திலிருந்தே இயக்க வெறியை
உணர்ச்சியை, பற்றை தன் இர
தத்திலும் நரம்பிலும் இரண்டற
கலந்து கொண்டிருப்பவர் தான்
இந்த இளஞ்செழியன்'' என்று
சிக்கல் பொதுக்கூட்டத்திலே நீங்
கள் பேசி ஓராண்டுதானே ஆகிறது
—இதற்குள்ளாக அந்தப் பேச்
உங்கள் மனத்திரையை விட்
அகன்றிருக்க முடியாதே! தாங்க
ளும், தங்கள் குமாரரும் எனக்கு
அளித்துவரும் ஆதரவுக்கும் ஒத்
தாசைக்கும் மிகவும் நன்றி செலுத்
துகிறேன் என்று தாங்கள் மணி
மொழியாருக்கு எழுதிய கடிதம்
இங்கே இருக்கிற அவருடைய
மேஜையறையிலே, இப்போது
கூட அதோ கிடக்கிறதே—ஒரு
மாபெரும் தலைவர் கட்சித் தொண்
டரை இதைவிடச்சிறந்த முறையில்
எப்படிப் பாராட்டமுடியும்? இப்
படியெல்லாம் தங்களாலே பாராட்
டப்பட்டவர்கள்—புகழ்மாலை சூட்
டப்பட்டவர்கள் ஆகியவர்கள்
தானே இப்போது திராவிட முன்

னேற்றக் கழக மேடையிலே காணப்படுபவர்கள்? திருமணப் பிரச்சினை தோன்றுவதற்கு முன்னாள் வரையிலே இவ்வண்ணம் தங்களாலே ஒருமுகமாகப் பாராட்டியும் புகழ்ந்தும் பேசப்பட்டவர்கள் அத்தனை பேரும் திடீரென்று சுயநலமிகளாகி விட்டார்கள் என்று மனம் துணிந்து எழுதுகிறீர்களே—இதை யார் நம்புவார்கள்? திருமணத்திற்கு முன்னரெல்லாம் தங்களுடைய பாராட்டு மொழிகளிலே நீந்தித் திளைத்தவர்களை, அவர்கள், தங்கள் திருமணத்தை எதிர்த்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக சுயநலமிகள் என்று சொல்ல, தலைவரே, உங்கள் நெஞ்சு எப்படித்தான் துணிந்ததோ?

ஊருக்கு உரைப்பது இருக்கட்டும் அண்ணலே, இவர்கள் அனைவரும் சுயநலமிகள்தான் என்று நீங்கள் உங்கள் உள்ளத்திற்கு உரைக்க முடியுமா—ஒப்புமா உங்கள் உள்ளம் உங்கள் பேனா தீட்டிடும் அந்தப் பொச்சரிப்பு வாசகத்தை? ஏற்குமா உங்கள் மனச்சான்று?

ஒரு கண நேரம்— ஒரே ஒரு கண நேரம்தான், அதிகமில்லை— ஒரு கண நேரம், கட்சி—பிளவு—பேதம் — திருமணம் — முன்னேற்றக் கழகம், ஆகிய இவ்வளவு பிரச்சினைகளையும் உங்கள் உள்ளத்திலிருந்து ஒதுக்கிவைத்துவிட்டு, பிறகு, தனியாக, உங்கள் தூய உள்ளத்தைப் பார்த்து, "என் அருமைத் தொண்டர்களையும் தோழர்களையும் சுயநலமிகள் என்று என் பேனா எழுதியிருக்கிறதே, இதை நீ ஒப்புக்கொள்கிறாயா?" என்று கேட்டுப் பாருங்கள். தகாது தகாது அந்தத் தப்புரை என்று உங்கள் உள்ளம், ஒரு விநாடியும் தயக்கமின்றி உடனே அழுத்தந் திருத்தமான விடை கூறக் காண்பீர்கள். ஓயாமல் எங்களைத் தூற்றும் உயர்தரமான பணியிலிருந்து சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ள முடியுமானால், உடனே, அந்த உள்ளத்தோடு சிறிது நேரம் உரையாடிப் பாருங்கள். உரையாடினால், அது, உன்னதமான முறையிலே, உங்களுக்கு, இந்தத் தொண்டர்களின் தூய்மையையும் வாய்மையையும் நேர்மையையும் நற்பண்பினையும் நீங்கள் கேட்டுக் கண்ணீர் சிந்தவேண்டிய அளவுக்கு எடுத்துக்கூறும். இதெல்லாம் உனக்கெப்படியப்பா தெரியும், மனப்பண்பு நூல் படித்தவனோ நீ என்று கேட்கிறீர்களா? மகன், தந்தையின் உள்ளத்தை உணர மனப்பண்பு நூலா படிக்க வேண்டும்? மகன், மகன் என்ற காரணத்தாலேயே சில உண்மைகளை இயற்கையாகவே தெரிந்து கொள்ள முடிகிறது — அத்தகு உண்மைகளிலேதான் இதுவுமொன்று, தந்தையே!

சுயநலமிகள் என்று 'செந்தமிழ்' பேசிப்பேசிச் சலித்த பிறகு இப்போது சில நாட்களாக துரோகிகள் என்ற துந்துபியை முழக்கத் தொடங்கியிருக்கிறீர். யாருக்கு, ஏந்தலே, நாங்கள் துரோகம் செய்திருக்கிறோம்? கட்சிக்கா—இந்தக் கட்சியைவிட்டு வேறு கட்சியில் சேரவேண்டும் என்று நாங்கள் கனவிலும் கருதியது கிடையாதே! கட்சிக் கொள்கைக்கா—அப்படியும் இருக்க முடியாதே—கட்சிக் கொள்கையின் வளர்ச்சிக்காக எங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்துவிட்டிருக்கிறோமே! ஒருக்கால் நாங்கள் தங்களுக்குத் துரோகம் செய்தோம் என்று கூறுகிறீரா—அப்படிக் கூறுவது அறம் ஆகாதே—எங்கள் கட்சிப் பணியின் பாதிப் பகுதி தங்களுடைய புகழை, பெருமையை, தியாகத்தை, தீரத்தை திக்கெட்டும் பரப்புவதிலேயே செலவிட்டிருக்கிறோமே! உலகத்திலே, வேறு எந்த இயக்கத்திலும், எந்தத் தலைவருக்கும், இவ்வளவு பரிபூரணமான "பக்தர்கள்" இருந்ததில்லை—இருந்ததாக எந்த நாட்டு வரலாறும் கூறவில்லை. தங்களுடைய ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு கட்டளையாகக் கொண்டு நிறைவேற்றியவர்கள் நாங்கள். தங்களுடைய ஒவ்வொரு எழுத்தையும் ஒவ்வொரு தாக்கீதாகக் கொண்டு தங்கள் சித்தம்—எங்கள் பாக்கியம் என்று கருதியவர்கள் நாங்கள். தங்களுடைய சொற்பொழிவை எங்களுடைய இருதய கீதமாகவும், தங்களுடைய கட்டுரைகளை எங்களுடைய வாழ்க்கைப் பேறாகவும் எண்ணி இறுமாந்திருந்தவர்கள் நாங்கள். தங்கள் ஆணைகளை நிறைவேற்றுவதிலே ஒரு பூரிப்பும், தங்களுடைய பக்கத்திலே நிற்பதில் ஒரு புதுமகிழ்வும், தங்களுடைய தொண்டிலே பங்கு பெறுவதில் பேரானந்தமும், தங்கள் நலத்திற்காகப் பாடுபடுவதில் எல்லையற்ற இன்பமும் கண்டவர்கள் நாங்கள். ஐயா உங்களை அந்த மாநாட்டைக் கூட்டச் சொன்னார், இந்த மைதானத்திலே பொதுக் கூட்டம் போடச் சொன்னார், இன்ன ஊரிலே சென்று உங்களைப் பேசச்சொன்னார், பெட்ரோல் இத்தனை காலன் வாங்கிவைக்கச் சொன்னார், இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தச் சொன்னார் என்றெல்லாம் 'சேதிகள்' வந்து செவிகளில் வீழ்ந்த வேளையிலெல்லாம் இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்ற நிலைபெற்றவர்கள் நாங்கள். இப்படிப்பட்ட எங்களைப் பார்த்தா துரோகிகள் என்று கூறுவது? இந்த விபரீதத் திருமணத்தை எங்கள் உள்ளம் ஒப்ப மறுக்கிறதே என்று சொன்ன ஒரு குற்றத்தைத் தவிர வேறு என்ன குற்றம் புரிந்தோம் நாங்கள்? கொண்ட கொள்கைக்கு மாறாக நடக்கலாமா தலைவரே என்று கேட்டதா குற்றம்? அதற்குப் பெயரா துரோகம்? அதுவா தவறு? அதற்காகவா எங்கள் மீது இவ்வளவு பெரிய வீண்பழியை, அது வீண்பழியே என்பதை ஐயம் திரிபு அற அறிந்திருந்தும், சுமத்துவது? தாங்கள் இப்படியெல்லாம் தவறான பாதைவழி சென்று, இல்லாத குற்றங்களை, புரியாத மக்கள்மீது, வீணாகச் சுமத்துவது, எங்களுக்கு அவமானத்தைத் தருகிறதே! எங்கள் தந்தை வீண்பழி சுமத்தும் பண்பினரல்ல என்று இதுவரை நாங்கள் பெருமையாக எண்ணிக்கொண்டிருந்தோமே, அந்த எண்ணத்தை இடிந்த கோட்டையாக்கிவிட்டீரே!

"உங்கள் அனைவரையுமா சொன்னேன், துரோகி என்று! அண்ணாத்துரையை அல்லவா சொன்னேன்!" என்று நீங்கள் கூறக்கூடும். அண்ணா அவர்கள் தானாகட்டும், என்ன துரோகம் புரிந்திருக்கிறார் கட்சிக்கு? கூற முடியுமா நீங்கள்?

எங்கெங்கோ கட்சிக் கூடாரங்களிலோ உலவிக்கொண்டிருந்த எங்களைப்போன்ற ஆயிரமாயிரம் வாலிபர்களை தன்னுடைய அழகு தமிழ் எனும் வலை விரித்து இந்தத் திராவிடர் இயக்கப் பாசறைக்குள் கொண்டுவந்து சேர்த்தாரே அந்த

தென்னாட்டுத் தளபதி — அதுவா, துரோகம்?

கல்லூரிகளை யெல்லாம் பகுத்தறிவுப் படைவீடுகளாகவும், மாணவர்களையெல்லாம் சுயமரியாதை இளஞ்சிங்கங்களாகவும், புலவர்களையெல்லாம் புரட்சியின் சின்னங்களாகவும் மாற்றி அமைத்து மறுகோலம் செய்தாரே அந்த அறிஞரேறு—அதுவா, துரோகம்?

தன்னுடைய வசீகரமிக்க எழுத்தாலும் தேனினுமினிய பேச்சாலும் மாற்றுக் கட்சி மண்டலங்களிலெல்லாம்கூட நம் கட்சிக்கொள்கைகளுக்கு உயர்ந்த மதிப்பை, சிறப்பை, செல்வாக்கை தேடிக்கொடுத்தாரே அந்தத் தமிழ்நாட்டுப் பெர்னாட்ஷா—அதுவா; துரோகம்?

இருபதாண்டுகளாக சுயமரியாதை இயக்கம் தமிழ்நாட்டில் இருந்தும் நுழையமுடியாமல் தவித்துக்கொண்டிருந்த எத்தனை எத்தனையோ துறைகளில் எல்லாம் தன்னந்தனியாக தைரியமாக நுழைந்து, அங்கெல்லாம் அறிவியக்கத்திற்கு அளவற்ற ஆதரவை உண்டுபண்ணி யிருக்கிறாரே அந்த இளைஞர்தம் இதயகீதம்—அதுவா, துரோகம்?

ஐயையோ! கலையா, அது ஆரிய வலையாச்சே! கலையிலாவது பகுத்தறிவை நுழைப்பதாவது! தீண்டினால் திருநீலகண்டம் என்று கூறிவிடுமே என்றெண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த நிலையை மாற்றி கலைக்கோட்டத்தை திராவிடர் இயக்கக் கருங்கற் கோட்டை என்று மாற்றாரும் மனம் ஒப்பிக் கூறும் விதத்திலே அங்கேயும் தன் வெற்றிக்கொடியை நாட்டினாரே அந்தக் கலை உலக தலைவர்—அதுவா, துரோகம்?

மூலை முடுக்குகளிலே மட்டும் தேங்கிக்கிடந்த சுயமரியாதை மின்சாரத்தை திக்கெட்டும் கொண்டு சென்று தமிழகம் எங்கும் பாய வைத்தாரே, நாடகத்தில் — சினிமாவில் — இலக்கியத்தில் — எங்கெங்கும் பரவவைத்தாரே, அதுவா துரோகம்?

"மேடைப் பேச்சா—சுயமரியாதைக்காரனின் பிரத்யேக உரிமை அது! இனிய தமிழ்எழுத்தா—திராவிடர் கழகத்தின் தனிச் சொத்து அது! அவர்களை மிஞ்சக்கூடியவர்கள் பேச்சிலும் எழுத்திலும் யார் இருக்கிறார்கள் தமிழகத்தில்" என்று, சுயமரியாதைக்காரர்களல்ல, வேற்றுக்கட்சி உறுப்பினர்களெல்லாம் வியந்து வியந்து பேசத்தக்க உயரிய நிலையை உருவாக்கிக் காட்டினாரே, அதன் பெயரா துரோகம்?

எது துரோகம், தலைவரே, இவற்றிலே எது, துரோகச் சிந்தையின் விளைவு?

இந்தச் செயல்களிலே, எதனை நீர் துரோகச் செயலின் விளைவு என்று கூறுகிறீர் எந்த ஆதாரத்தின் மீது?

நிதிக்குப் பணம் சேர்த்துத் தராதது, ஆகஸ்டு 15, கருஞ்சட்டை அணியாதது, நான் கொடுத்துதவிய அச்செழுத்துகளைக்கொண்டு நடத்தப்படும் "திராவிடநாடு" இதழில் என் திருமணத்தைக் கண்டித்து எழுதியது ஆகிய இந்த நான்கும் தான் மாபாவி அண்ணாத்துரை செய்த மாபாதகங்கள் என்பதாக இந்த வாரம் விடுதலை தலையங்கம் ஒன்றில், தாங்கள், ஆத்திரத்தின் காரணமாக அனல் கட்டிகளை எங்கள் மீது அள்ளி வீசும் 'பாணி'யில் குறிப்பிட்டிருக்கிறீர்களே, இந்த நான்கு செயல்களிலேயும் "துரோகம்" துளியளவேனும் இருப்பதாக, கட்சி இதுவரை நடத்தப்பட்ட விதத்தையும் கட்சியில் நடந்த உள் நிகழ்ச்சிகளையும் ஓரளவேனும் அறிந்திருக்கும் யாருமே கூறத் துணியார்கள்.

1, கட்சி நிதி, இது அவ்வளவும் தங்கள் சொந்த நிதி என்ற நிலையிலே கொண்டுவரப்பட்டு, தங்கள் சொந்த வாரிசு என்று தாங்கள் கூறும் ஒரு தனி மனிதராகிய மணியம்மையாரின் கரத்திலே செல்ல இருக்கிறது என்ற வெட்கக் கேட்டைக் கேட்டு நாடு நகைக்கிற இந்த நேரத்திலே, இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான நிலைமைக்கு உள்ளாகவிருந்த ஒரு நிதிக்கு—அது கட்சி நிதி அல்ல, கட்சியின் பெயரால் திரட்டப்பட்ட நிதி—அண்ணாத்துரை, தானும் பணம் சேர்த்துக்கொடுத்த பொது மக்களை வஞ்சிக்கும் வேதனைச் செயலைப் புரியாமல் இருந்தது கண்டு நாங்கள் மட்டுமல்ல—தலைவரே,நாடே பெருமைப்படுகிறது. அதே நேரத்தில் அண்ணாத்துரையைத் தவிர, நாங்கள் ஏனையோரெல்லாம், நிதி ஒரு மணியம்மையாரின் கரத்திலேதான் சென்று "பாதுகாப்பு"த்(!) தேடப்போகிறது என்பதை முன்கூட்டி அறிய முடியாமல் கட்சியின் பொறுப்பிலே இருந்து, கட்சி நிர்வாகக் குழுவினரால், கட்சியின் வளர்ச்சிக்காகக் செலவிடப்பட இருக்கிறது என்று தவறாக எண்ணிக்கொண்டு, நாட்டு மக்களிடத்தெல்லாம் சென்று காலணா காலணாவாகப் பொருள் ஈட்டித் தந்தோமே, அந்த முட்டாள் தனத்தை எண்ணி வேதனைப்படவும் செய்கிறோம், இப்படிப்பட்ட சமயமாகப் பார்த்து, "பார், பார், அண்ணாத்துரையின் துரோகத்தை—நிதிக்குப் பொருள் தேடித் தரவில்லை" என்று நீங்கள் கூறுவதைக் கேட்டு, தலைவரே, எங்கட்குச் சிரிப்புத்தான் வருகிறது.

2. ஆகஸ்டு 15: இந்தப் பிரச்சினை நாட்டிலே எழுந்த போது திராவிடர் கழகம் இந்தப் பிரச்சினையைப்பற்றி எத்தகைய அதிகாரபூர்வமான தீர்மானமும் நிறைவேற்றவில்லை. இன்றைய வரையிலேகூட நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. ஆகவே இந்த நாளை துக்க நாள் என்று கூறுபவர்களும் சரி, "அல்ல—மகிழ்ச்சி நாள்" என்று பேசுபவர்களும் சரி, அவரவர்கள் தம் தம் சொந்தக் கருத்தைக் கூறுகிறார்கள் என்றுதான் ஆகுமே தவிர, அது, கட்சிக் கருத்தாக ஒரு போதும் ஆகாது. நான் தலைவன் அல்லவா, என் கருத்துத்தானே பின்பற்றப்பட வேண்டியது என்று நீங்கள் கூறுவதானால், நான் கட்சிச் செயலாளன் அல்லவா—என் கருத்துந் தானே• பின்பற்றப்படவேண்டும் என்று, அண்ணாத்துரை, கேட்கவில்லை, ஆனால் கேட்டிருந்தால் அதை நீங்கள் தவறு என்று கூற முடியாது. உண்மையில் கழகத் தோழர்கள் அனைவரும் பின் பற்றியிருக்க வேண்டியது கழக நிர்வாகக் கமிட்டியின் கட்டளையை. ஆனால் கமிட்டியோ இதைப் பற்றி வாயே திறக்கவில்லை. கமிட்டியைக் கூட்டி அதன் முடிவைத் தெரிந்துகொண்டு அந்த முடிவை நிறைவேற்றி வைத்திருக்க வேண்டியதே உங்கள் கடமை. ஆனால் அந்தக் கடமையையோ நீங்கள் இன்றளவும் செய்யவில்லை. இந்நிலையில் ஆகஸ்டு 15-ஐப் பற்றி யார் யார் எந்த விதக் கருத்துக் கொண்டிருந்தாலும் அது அவரவர்களின் சொந்தக் கருத்து—கழகக் கருத்தல்ல, கழகக் கருத்து என்பதே ஒன்று இல்லாதபோது கழ

க் கருத்துக்குத் துரோகம் செய்யும் பிரச்சினை எங்கிருந்து தோன்ற முடியும்?

**3 கருஞ்சட்டை அணியாதது:** சட்டதிட்டம், நிர்வாக ஒழுங்கு, அமைப்பு முறை ஆகியவற்றின் அரிச்சுவடியையும் அறியாதவர்கள் வேண்டுமானால் அண்ணா அவர்கள் ஏன் கருஞ்சட்டை அணியவில்லை என்று கேட்கலாம், ஆனால் நீங்கள் கேட்கக் கூடாது. கருப்புச் சட்டைப் படை என்ற பெயரிலே ஒரு தொண்டர் படை அமைப்பதென்றும், அந்தப் **படையிலே சேர்பவர்கள்** கருஞ்சட்டை அணிந்திருக்க வேண்டும் என்பதும் தான் கருஞ்சட்டையைப்பற்றி முதன் முதலில், கட்சி, நிறைவேற்றிய தீர்மானம். **இந்தத் தீர்மானத்தின்படி, படையிலே சேராத யாரும் கருஞ்சட்டை அணியத் தேவையில்லை—ஆகவே அண்ணாத்துரை அணியவில்லை.**

பிறகோர் சமயம், கட்சிக் கமிட்டிகூடி, படை உறுப்பினர் மட்டுமல்லாமல், மேடையில் பேசும்போது கட்சிப் பிரசாரகர்களும் கருஞ்சட்டை அணியவேண்டும் என்றோர் தீர்மானம் நிறைவேற்றிற்று. அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, கட்சிக் கூட்டங்களில் பேசும்போதெல்லாம் அண்ணா அவர்கள் கருஞ்சட்டை அணிந்தேதான் இருக்கிறார். ஆம்! கருஞ்சட்டையைப் பற்றிய கட்சித் தீர்மானங்களிலிருந்து அண்ணாத்துரை அணுவளவும் பிறழவில்லை—ஆனாலும் அவர் துரோகி என்று தூற்றப்படுகிறார்—நியாயமா?

**4. என் எழுத்துக்களைக் கொண்டு என்னையே தாக்கலாமா என்பது:** பெரியார் அவர்களே, தாங்கள் அண்ணா அவர்களுக்குக் கொஞ்சம் அச்செழுத்துக்கள் கொடுத்துதவியது உண்மை. அதற்கு நன்றி செலுத்த மறுக்கும் கயவர்கள் அல்ல நாங்கள். ஆனால் தங்களிடமிருந்து இந்த ஒரு உதவியைப் பெற்றுக் கொண்டதாலேயே, தாங்கள் எவ்வளவு பெருந்தவறைச் செய்தாலும், அதனால் கட்சியின் தன்மானமே பறிபோவதாக இருந்தாலும், அண்ணா, வாய்மூடி மௌனியாக இருக்கவேண்டுமே தவிர, தங்கள் பெருந்தவறைக் கண்டிக்கக் கூடாது என்றால், அதை எந்த அறிவாளியும் ஒப்புக் கொள்ளமாட்டான். தனிப்பட்ட முறையில் ஒருவருக்கு நன்றி செலுத்துவது என்பது வேறு. பொதுவாழ்வுத் துறையில் அவர் செய்யும் தவறைக் கண்டிப்பது என்பது வேறு. இரண்டையும் ஒன்றுக்கிக் குழப்புவது தகாது; தவறு.

அண்ணாத்துரை என் எழுத்தைக் கொண்டே என் திருமணத் தவறைக் கண்டிப்பது துரோகமல்லவா என்று கேட்டீர்களே, உங்களை நான் மிகப் பணிவாகக் கேட்கிறேன், நாங்கள் ஆயிரமாயிரம் பேர் அளித்த ஆதரவால், உதவியால், பணத்தால், செல்வாக்கால் நடமாடும் ஓர் ஏடாகிய 'விடுதலை'யிலேயே, அப்படி அதற்கு வாழ்வளித்த எங்களையே சதிகாரர்கள் என்றும் மாபாவிகள் என்றும் மோசக்காரர்கள் என்றும் முழு முட்டாள்கள் என்றும் கட்டுரைகள் பலவற்றைத் தீட்டியபடி இருக்கிறீரே இதுமட்டும் துரோகமல்லவா?

தலைவரே, தந்தையே, பெரியாரே, புத்துலகச் சிற்பி என்று எங்களால் பூரிப்புடன் அழைக்கப்படும் பெருமை படைத்தவரே, மாப்புகழ் வாய்ந்தவரே, வேண்டாம்—இத்தகு வீண் வாதங்கள் வேண்டாம்—சின்னஞ் சிறு குழந்தையும் நம்பமுடியாத இத்தகு சொத்தை வாதங்களைத் தாங்கள் எழுப்பவேண்டாம்—ஏதோ நடந்தது நடந்துவிட்டது, பொருந்தா மணம் முடிந்துவிட்டது, பாதைகளும் பிரிந்துவிட்டன, தனித்தனிக் குடும்பங்களும், அமைத்து விட்டோம், இனியும் நீங்கள் எங்களை வீணாகத் தூற்றிக் கொண்டிருக்கும் இச்சின்னஞ்சிறு பணி புரிவதிலே அர்த்தமுமில்லை, அது அவசியமுமல்ல, அது தங்கள் பெருமைக்கும் நிலைமைக்கும் ஏற்றதுமல்ல. மிகப் பெரிய பணி—தனித்திராவிடம் அமைக்கும் பணி—இன்றியமையாத பணி அந்தப் பெரும்பணி நம் இருசாராரையுங்கூவி அழைக்கிறது அந்த அன்பழைப்பை ஏற்போம், அண்ணா அவர்கள் கூறியதுபோல நம் இரு கழகங்களும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருக்கும் வகை செய்வோம். செய்வோமா? செய்ய வழி விடுவீர்களா தாங்கள் தங்கள் கட்சிக்கு?

எதற்கும் பதில் எழுதுங்கள்:

இங்ஙனம்,

ஆயிரம் முறை தங்களால் தூற்றப் பட்டாலும் தங்கள் மீது கொண்டிருக்கும் பாசத்தையும் பற்றையும் சிறிதும் மறவாத தங்கள் மகன்,

ஞானமானா

---

4ம்- பக்கத் தொடர்ச்சி

எப்படியப்பா வெற்றிதரும்? இனி நாம் பாமர மக்களைக் கண்டு இதுபோன்ற குருட்டுப் பழக்க வழக்கங்களை விட்டுத் தொலையுங்கள் என்று வேண்டிக்கொண்டால், சகலகலா வல்லவராகிய மௌலானா சாகிபே சந்தோஷத்துடன் கொளுத்தியிருக்கிறாரே கொடும்பாவி—அப்படியிருக்க நாங்கள் கொளுத்தினால் தவறென்ன என்று திருப்பிக் கேட்டார்களே அவர்கள். அப்போது நாம் என்ன பதில் கூறமுடியும் வெட்கத்தால் தலைகுனிந்துகொள்வதைத் தவிர? இதைப்பற்றித்தான் நான் எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன் இவ்வளவு நேரம், வேறொன்றுமில்லை'' என்று சற்று விளக்கமாகவே வஞ்சிக்கோவுக்கு என் மனநிலையை எடுத்துக் கூறினேன்.

உங்களைத்தான் கேட்கிறேன், கூறுங்கள் நீங்கள் தான், கொடும்பாவி செய்து வைத்து அதைக் கொளுத்திக் காட்டியிருக்கிறாரே கனம் அமைச்சர், செய்யலாமா அவர் இதுபோல? அறிவுடைமைச் செயல்தானா இது? கொடும்பாவி கொளுத்திவிடுவதாலேயே கல்வியின்மை போய் விடுமா? கல்வியின்மை தொலைவதற்காக கனம் அமைச்சர் கொடும்பாவி கொளுத்துவதற்கும், மழையின்மை தொலைவதற்காக மக்கள் பலர் கொடும்பாவி கொளுத்துவதற்கும் என்ன வேறுபாடு? கடும் வெயிலில் காய்ந்து, நாடு காடாகி, வயல் பொட்டலாகி, விளைவற்றி, ஏரி குளம் வறண்டு, கிணற்றில் நீர் சுண்டிப்போய், மாதக்கணக்கில் மழை ஒரு துளியும் விழாதிருக்கும் வறட்சி சகாப்தத்தில், மனமுடைந்த

போயிருக்கும் மக்கள், இவ்வளவு பெருங்கேடு நாட்டிற்கு நேர்ந்திருப்பது ஏதோ ஒரு குட்டிச் சாத்தான் அல்லது கொடும் பூதம் அல்லது தீய ஆவியின் கொடுமைச் செயலே என்று மனமாரநம்பி, அப்படிப்பட்ட ஒரு பூதத்தை அல்லது கொடும்பாவியை மட்டையாலும் மாத்தாலும் வைக்கோல் கத்தையாலும் வெறும் செத்தையாலும் செய்து கொளுத்துகிறார்கள்—அப்படிக்கொளுத்துவதாலே அந்தப் பூதம் அழிந்து போகும், மனதை மருட்டும் வறட்சி தொலைந்து போகும், வானம் இருண்டு மழை பொழியும் என்று நம்புகிறார்கள். இதோ கல்வியமைச்சரும் அதே காரியத்தைத் தான் புரிகிறார்—வேறொரு காரணத்திற்காக! அதாவது, கல்வியின்மை தொலைவதற்காக! மழை பொழிவதற்கும் பொழியாமல் இருப்பதற்கும் உண்டான இயற்கைக்காரணங்களைப் பாமர மக்கள் அறியார், ஏனெனில் அவர்கட்கு விஞ்ஞான ஒளி இன்னமும் எட்டவில்லை, எனவே அவர்கள் மழையின்மைக்குக் காரணம் ஒரு கரும்பூதம் என்றெண்ணுகிறார்கள்— கொடும்பாவி கொளுத்துகிறார்கள். ஆகவே அவர்கள் செயல்கண்டு நாம் வெட்கப்படமாட்டோம், பரிதாபம்தான் படுவோம். ஆனால் கல்வி நீரோடை நாடெங்கும் ஏன் பாயவில்லை என்பதையும் அதை எப்படிப் பாயவைப்பது என்பதையும் நன்றாக உணர்ந்திருக்கும் கனம் கல்வி அமைச்சர் கொடும்பாவி கொளுத்துகிறார் என்றால் நாம் அவர் செயல் கண்டு பரிதாபப்படமுடியாது — இப்படியும் இருக்கிறாரே நம் அமைச்சர் என்று வெட்கம்தான் அடைவோம்.

கொளுத்திவிட்டார் கொடும்பாவி! தீர்ந்துவிட்டது அவர் வேலை! முடிந்துவிட்டது, முற்றிலும் முடிந்துவிட்டது, அவர் பொறுப்பு! ஆனால் நாட்டைக் கவ்விக்கொண்டிருக்கும் அறியாமை இருளைப் போக்கியாகவேண்டிய மகத்தான பணி அணுவளவும் குறையாமல் அப்படியே இருக்கிறதே, இதை யார் செய்வது, யார்?

---

[14-ம் பக்கத் தொடர்ச்சி]

கிடைத்த இந்தப் பெரிய எதிர்ப்பைக் கண்டு, பிராமணகுரு கங்கு கங்குபட்டர்கூட சிறிது அஞ்சியவராய், வேதமந்திரங்களை சிவாஜியின்முன் கூறுவதை அடியோடு நிறுத்திவிட்டு, "ஏதோ ஒரு மாதிரியான முறை"யில்தான் க்ஷத்திரிய பரம்பரையில் சிவாஜியைப் பதிவு செய்துவைத்தார்.

"எனவே வேதமோதும் உரிமையைப் பொறுத்தவரை, அது பிராமணர்களின் தனிச் சொத்தாகவே தான் இதன்பிறகும் இருக்கலாயிற்றே தவிர, சிவாஜிக்கு அந்த உரிமை கிடைக்கவில்லை,"

ஜதுநாத் சர்க்காரால் இதுபோலக் கூறப்படும் இதே நிகழ்ச்சியைப்பற்றி, **ஹரப்பிரசாத் சாஸ்திரி** என்ற மற்றொரு சரித்திராசிரியர் குறிப்பிடும்போது, "தங்களுடைய தனிப் பெருமையையும் காப்பாற்றிக்கொண்டு, சிவாஜியினுடைய வேண்டுகோளையும் நிறைவேற்றி வைப்பதற்காக, அநேகமாக, அந்தப் பேராசை பிடித்த பிராமணர்கள் ஒரு சில வேத மந்திரங்களை மட்டும் சிவாஜியின் காதில் ஒரு சொல்கூட விழமுடியாத விதமாக மிக சாமர்த்தியமாக முணுமுணுத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்" என்பதாக ஒரு ருசிகரமான தகவலைத் தந்திருக்கிறார்கள்.

மராட்டிய மண்டலத்து முப்புரிதாரிகளின் இந்த ஆணவப் போக்கு கண்டு, சிவாஜி மனம் மிக முறிந்தவரானார். **ஜதுநாத் சர்க்கார்** கூறுவதுபோல, எந்தப் பிராமணர்களின் பாதுகாப்புக்காகவும் வாழ்க்கைச் செழிப்புக்காகவும் தன்னுடைய வாழ்நாளையே சிவாஜி அர்ப்பணம் செய்தாரோ, அதே பிராமணர்கள், தன்னை ஒரு க்ஷத்திரியனுக்குவதாகக் கூறி, அதற்காக, தன் பொக்கிஷமே காலியாக வேண்டிய அளவுக்கு தன்னிடமிருந்து பொன்னும் பொருளும் தானமாகப் பெற்றுக்கொண்ட பிறகும்கூட, தன்னை ஒரு சூத்திரன் என்றே வற்புறுத்திக் கூறுவதையும், அந்தப்படியே நடத்துவதையும் கண்டபோது, சிவாஜியின் உள்ளம் அனலிடு மெழுகாயிற்று. சில பல சமயம் ஆரிய வட்டாரத்தவர் மீது சிவாஜிக்கு அளவற்ற ஆத்திரமும் வரலாயிற்று. ஒருமுறை, சிவாஜி, பிராமணர்கள் தனக்கு வேதமந்திரங்களைக் கற்பித்துத்தர மறுக்கிறார்கள் என்பதைக் கண்டு அவர்கள் மீது கடுங்கோபம் கொண்டு, ஆட்சியில் உத்தியோகம் வகித்துக் கொண்டிருந்த எல்லாப் பிராமணர்களையும் வேலையை விட்டு விலக்கிவிட்டாராம். இது ஏன் என்று பிறர் கேட்டபோது, "அவர்களெல்லாம் மகாப் பெரியவர்கள்; முனிபுங்கவர்கள்; தவசிரேஷ்டர்கள். அவர்கள் இந்தச் சாமான்யனின் கீழிருந்து அரசாங்க அலுவல் பார்ப்பது தகாது. ஆண்டவனை வழிபடும் புனிதப் பணி ஒன்றைத்தவிர வேறு எந்தப் பணியிலும் அவர்களை ஈடுபடுத்துவது மகா பாபம்" என்று கிண்டலாகப் பதில் கூறினாராம். **தரிக்—ஈ—சிவாஜி** என்ற பழைய வரலாற்றுச் சுவடியொன்று இந்தத் தகவலை நமக்குத் தருகிறது.

சிவாஜி, தன் இறுதிக் காலத்தில் ஆரிய மாயையின் கொடுமையை எண்ணிப் பெரிதும் வருந்தியிருக்கிறான் என்பதற்கு, வரலாறு, இது ஒன்றுதானா, இதுபோன்ற எத்தனையோ ஆதாரங்களைத் தரத்தான் செய்கிறது, ஆனால், ஆரியச் சிலந்தி விரித்துள்ள வஞ்சக வலையின் தன்மை இத்தகையது என்பதை சிவாஜி உணரத் தலைப்படுவதற்கு முன்னாலேயே அந்தச் சிலந்தியின் வலையிலே சிவாஜி சரியான முறையில் சிக்கிவிட்டான். எனவே, பிறகு, அந்த மாவீரனால், அந்த வலையிலிருந்து முற்றிலும் தப்பமுடியவில்லை.

ஆரியம் ஒரு பயங்கர பலிபீடம். அந்தப் பலிபீடத்திற்கு இரையானவர்கள், பலர், பலப்பலர், பற்பல நூற்றாண்டினர், பல்வேறு திறத்தினர். அவர்களில் மிக முக்கியமானவர்களில் ஒருவரே மராட்டிய மண்டலத்து மாபெரும் தலைவன் சிவாஜி. ஆம்! அப்படித்தான் கூறுகிறது வரலாற்றுச் சுவடி!

(தொடரும்)

# பூசுரர் உலகுக்குக் கிடைத்தது பணம் காய்க்கும் பழுமரம்!

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

யளவு நிறுக்கப்பட்டு, அவ்வளவும் பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டது.

இது முடிந்ததும்,

மெல்லிய சரிகை
கற்பூரம்
உப்பு
பாக்கு வெட்டிக் கருவிகள்
தேங்காய்
பலவகையான வாசனைத் திரவியங்கள்
வெண்ணெய்
வெல்லம்
பலவிதப் பழங்கள்
எத்தனையோ வகையான தின்பண்டங்கள்
வெற்றிலை பாக்கு
மது

ஆகிய இவ்வளவு பொருள்களும், இன்னும் பலவிதமான பண்டங்களும் விலை பொருள்களும், தனித் தனியே சிவாஜியை வைத்து, எடைக்கு எடை, நிறுத்தெடுக்கப்பட்டு, பிராமணர்களுக்கு, சிவாஜி இதுவரை செய்த பாவங்களுக்குக் கழுவாய் தேடும் முறையில், ஏராளமாக வழங்கப்பட்டன.

இவ்வளவோடாவது நின்றதா, பூசுரர் உலகுக்குக் கிடைத்த ''அதிர்ஷ்டம்!'' இல்லை தோழர்களே, இன்னமும் ஏராளமாக இருக்கிறது அவர்களுக்கு, சிவாஜி. தன் பாவமூட்டைகளை உதறித் தள்ளுவதற்காக, அள்ளிக்கொடுத்த பொக்கிஷத்தின் கணக்குப் பட்டியல்!

6-6-1674-ம் நாளன்று பட்டாபிஷேகம் நடைபெற்றது. கங்குபட்டர் முடிசூட்டு விழாவை முன்னின்று நடத்திவைத்தார். அன்றைய தினம், சிவாஜி, அதிகாலையில் எழுந்து, குளித்து முழுகி, எண்ணற்ற சடங்குகளை ஒன்றன்பின் ஒன்றாக நடத்தி வைத்து, இறுதியில், கங்குபட்டர் காலிலும், மகுடாபிஷேகத்திற்கு வந்திருந்த ஏனைய முக்கியபிராமணோத்தமர்கள் காலிலும் வீழ்ந்து வணங்கினான். பிறகு, முடிசூட்டும் சடங்கினை கங்குபட்டர் தொடங்கினார். பிராமணர்கட்கு, இந்த முக்கிய நிகழ்ச்சியின்போது, பொன்னும் பொருளும் ஆபரணங்களும் விதவிதமான ஆடைகளும் ஏராளமாக வழங்கப்பட்டன. கங்குபட்டருக்கும் இந்த நேரத்தில் கிடைத்த சன்மானங்களும் பட்டு பீதாம்பரங்களும் அமோகம்!

முடி, சிவாஜியின் தலைமீது, கங்குபட்டரால் எடுத்து வைக்கப்பட்டு சிவாஜி சத்திரபதியானார் (மன்னரானார்) என்று வாழ்த்துரை வழங்கப்பட்டதும், அதுவரை வேத கோஷம் முழங்கிக் கொண்டிருந்த பிராமணர்கள், சிவாஜியின் அருகே நெருங்கி வந்து நின்று, தங்கள் கரங்களை அவன் தலைமீது உயர்த்தி, அவனை ஆசீர்வதிக்கலாயினர். இந்த ''ஆசீர்வாதம்'' காரணமாக, மீண்டும் ஒருமுறை சிவாஜி, அந்தப் பிராமணர்களுக்குப் பலவகை தானங்களும் புரியலானான்.

பட்டம் சூட்டுவிழா முடிந்த மறுநாள் வேறு, பிராமணர்கட்குத் தானம் வழங்கப்பட்டது.

''அடா அடா! சிவாஜியின் முடிசூட்டுவிழா, ஆரிய குலத்தவர்க்குச் சரியானதோர் பணம் காய்க்கும் பழுமரமாக ஆகிவிட்டது போலிருக்கிறதே—இவ்வளவு பெரும் பொருளா, இவர்களுக்குக் கிடைத்தது—ஆச்சரியம், ஆச்சரியம்!', என்றுதான், இந்தக் கட்டுரையைப் படிக்கும் எவரும் கூறுவர். பிராமண குலத்தவரைபணம் எனும் கடலிலேயே நீந்தித் திளைக்க வைத்துவிட்டானே சிவாஜி அவர்களைப் பணத்தாலேயே அபிஷேகம் செய்துவிட்டானே என்று சொல்லிச் சொல்லி வியப்படையாமல் இருக்க முடியாது யாரும்.

ஆனால் இவ்வளவு பண மலையை வேதியகுலத்தவர்க்கு வாரி வழங்கினரே சிவாஜி, திருப்தி இருந்ததா அவர்களுக்கு? அதுதான் இல்லை!

''என்ன! திருப்தி இல்லையா? அள்ள அள்ளக் குறையாத பெருநிதியைத் தானம் தருவதுபோல அல்லவா சிவாஜி ஏராளமாகவும் தாராளமாகவும் பொருளைக் கணக்கு வழக்கின்றி அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறான், இவ்வளவையும் கூசாமல் பெற்றுக் கொண்ட பிறகுமா திருப்தி பிறக்கவில்லை அந்தத் திருப்பிரம்மங்களுக்கு'' என்றுகூறி திடுக்கிட்டு விடாதீர்கள். கொஞ்சம் அமைதியாக இருங்கள், இதோ, ஆசிரியர் ஜதுநாத் சர்க்கார் வருகிறார், பேசுகிறார், கேட்போம்.

''இவ்வளவு தானமும் அவர்களுடைய பேராசையைத் தீர்ப்பதாக இல்லை. இந்தத் தானங்களை யெல்லாம் பெற்றுக் கொண்டான பிறகு, இரண்டு பிராமணர்கள், சிவாஜியைப் பார்த்து, சிவாஜி பல கோட்டைகளின் மீது படையெடுத்துச் சென்று போரிட்ட காலத்திலெல்லாம், அந்தப் போர்களின் காரணமாகப் பிராமணர்கள், பசுக்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும், அந்தக் கொலைகளின் காரணமாக, சிவாஜியைச் சூழ்ந்திருக்கும் பாவம் இன்னமும் கழுவப் படாமலே யிருக்கிறது என்றும், இதற்கு ஒரு பிராயச்சித்தம் செய்யவேண்டியது மிகவும் அவசியம் என்றும் எடுத்துக் காட்டினார்கள். இந்தப் பாவமன்னிப்புச் சீட்டை விற்பதற்கு அவர்கள் கேட்ட விலை ரூபா 8000 தான்! ஏற்கெனவே ஏராளமான அளவுக்கு நிதியை அவர்கட்கு வாரி வழங்கிய சிவாஜி, கேவலம், இந்தச் சிறுதொகையையா மறுக்கப் போகிறார்—இதையும் உடனே கொடுத்து விட்டார்!''

வேதிய புரியினரின் இந்த சில்லுண்டித்தனத்தைக் காண வரலாற்றாசிரியர் ஜதுநாத் சர்க்காருக்கே கூட, கோபம் தாளமுடியவில்லை போலிருக்கிறது, ஆகவேதான் இது போல ஆத்திரம் தொனிக்கிறது அவருடைய குரலிலே அவர் இந்த நிகழ்ச்சியைக் கூறும்போது!

இந்த நிகழ்ச்சி ஓவியத்தைத் தீட்டிவிட்டு, பிறகு, சற்று காரசாரமான முறையிலேயே, ஜதுநாத் சர்க்கார், ''சூரத்தையும் கரிஞ்சியாவையும், சிவாஜி, சூறையாடிய நேரத்தில், அந்தப் படையெடுப்புகளின் காரணமாக, அங்கெல்லாம், அநியாயமாக மாண்டு போன நிரபராதிகளின் குடும்பத்திற்குப் பண உதவி செய்தால், அவர்கள் மரணத்திற்குக் காரணமாக இருந்த பாவம் தீராதோ, இ

# 'பிராமணீய' ஸ்டேஷன் மாஸ்டர் வழங்கிய 'பிறவி உயர்வு' டிக்கட்!

தச் சில பிராமணர்களின் பணப் பெட்டியை நிரப்பினால் தான் பாவம் போகுமோ, என்ன வேடிக்கையப்பா இது!" என்று எழுதியிருக்கிறார். ஒரு வரலாற்று ஆசிரியர் என்ற முறையிலே நிகழ்ச்சிகளைத் தொகுத்துத்தரும் பணிமட்டும் புரிய முன்வந்த அவருக்கே இந்த நிகழ்ச்சியை நினைக்கும்போது இவ்வளவு வெறுப்பும் கொதிப்பும் கோபமும் கிண்டலும் தோன்றுகின்றன என்றால் சமுதாய சீர்திருத்தப் பணிபுரிவதையே வாழ்க்கைப் பணியாகக் கொண்ட நமக்கு எவ்வளவு வெறுப்பை ஊட்டும் இந்த விபரீத சம்பவம்—அதை வார்த்தைகளால் வேறு விவரிக்கவுமா வேண்டும்?

"பட்டாபிஷேகத்தின் காரணமாக ஏற்பட்ட ஏராளமான செலவால், சிவாஜியின் கஜானா காலியாகிவிட்டது. துருப்புகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்குக்கூட, முடிசூட்டு விழாவுக்குப் பிறகு, சிவாஜியிடம் பணம் இல்லை. எனவே, விழா முடிந்ததும் முடியாததுமாக சிவாஜி, இதுவரை கைப்பற்றப்படாத இடங்களின்மீது படையெடுத்துச்சென்று பொன்னும் பொருளும் கைப்பற்றியாக வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது, சிவாஜியும் புறப்பட்டுவிட்டார் போர்க்களம் நோக்கி!" —"சிவாஜி"யின் வரலாற்றுச் சுவடியில், பட்டாபிஷேகம் என்ற அத்தியாயத்திற்கு அடுத்த அத்தியாயம் இப்படித்தான் ஆரம்பமாகிறது, அது வேறெப்படி ஆரம்பமாக முடியும்? பட்டாபிஷேகம், பிராமண குலத்தவரைப் பணத்தால் அபிஷேகிக்கவேண்டிய நிலையில் அல்லவா சிவாஜியைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டது! சிவாஜி, கங்குபட்டருக்கும் ஏனைய ஆரியகுலத்தவருக்கும் அள்ளிக் கொடுத்த பொருட் குவியல் என்ன சாமான்யமானதா! சிறு தொகையா? பலப்பல இலட்சங்கள்! அவன் அந்த வேதியபுரியினர்க்குத் தானம் வழங்கியதுதான் என்ன ஒருமுறையா, இருமுறையா? எண்ணற்ற முறைகள்! இந்த நிலையில் பொக்கிஷம் காலியானதிலே வியப்பென்ன இருக்கிறது? அது எப்படி காலியாகாமல் இருக்க முடியும்?

வீரன் சிவாஜியை சூத்திரப் பிறவியிலிருந்து க்ஷத்திரியப் பிறவிக்கு "ப்ரமோஷன்" செய்தனர் கங்குபட்டரும் அவர் இனத்தவரும்! அந்தப் "ப்ரமோஷனை"ப் பெறுவதற்காக சிவாஜி கொடுத்த விலை, நூறல்ல ஆயிரமல்ல இலட்சமல்ல கோடியுமல்ல, ஒரு பொக்கிஷம்! சூத்திரன் என்ற இரயில்வே ஜங்ஷனிலிருந்து க்ஷத்திரியன் என்ற இரயில்வே ஜங்ஷனுக்கு வர்ணாஸ்ரம ரயில்மூலமாகப் போக பிராமணீய ஸ்டேஷன் மாஸ்டர் வழங்கிய "பிறவிஉயர்வு" டிக்கட்டின் விலை ஒரு பொக்கிஷம்! ஆம், ஒரு பொக்கிஷமே காலியாகிவிட்டது சிவாஜியின் இந்த சூத்திர—க்ஷத்திரியப் பயணத்தின்போது!

ஆரியம், சிவாஜியை ஒரு க்ஷத்திரியன்தான் என்று ஒப்புக்கொள்வதற்காக, அந்த ஆரியத்திற்கு அளிக்கப்பட்ட நன்கொடை ஒரு பொக்கிஷம்! ஆனால் இந்தப் பொக்கிஷத்தைப் பெற்றுக்கொண்ட பிறகும் கூட, ஆரியம், ஏதோ பெயரளவுக்கு, ஏனோதானோ என்ற முறையில், சும்மா ஒப்புக்குத் தலையாட்டினேன் என்று நாம் கூறுவதில்லையா அந்தத் தோரணையில் தான் சிவாஜியை ஒரு க்ஷத்திரியன் என்று கூறி... சம்மதம் தந்ததே தவிர, உண்மையிலேயே, முழுமனதுடன் சிவாஜியை க்ஷத்திரியன் என்று வாய் குளிர மனம் குளிர ஒருபோதும் அழைக்கவில்லை. ஆரியத்தின் உதடு ஒப்புக்கொண்டதே தவிர உள்ளம் ஒப்பவில்லை! பேச்சிலே க்ஷத்திரியன்தான் சிவாஜி என்று கூறிவிட்டார்களே தவிர செயலிலே, அந்தச் சொல்லுக்கேற்ற சிறப்பை ஆரியபுரியினர் தந்தார்களில்லை சிவாஜிக்கு!

அவர்கள்தம் உள்ளத்திற்கும் உதட்டிற்கும் இடையே இருக்கும் இந்த 'விவாக ரத்து' எப்படியய்யா தெரிந்தது உமக்கு — ஏதேனும் ஆதாரம் உண்டா, கூறமுடியுமா— அல்லது இது வெறும் கயிறு திரிப்பு வேலையா என்று சிலராவது கேட்கக்கூடும். அப்படிப்பட்ட ஐய வினாக்காரர்களின் சந்தேகக் கேள்விக்குச் சரியான விடை தருவதற்காக, கடைசியாக ஒரு முறை, வரலாற்று ஆசிரியர் ஜதுநாத் சர்க்காரை அழைக்கிறோம்—அவருக்கு அடிக்கடி தரப்படும் 'தொல்லை'க்காக அவ[ர்] நம்மை மன்னிப்பாராக!

இதோ, **ஜதுநாத் சர்க்கார்** பேச[த்] தொடங்குகிறார். கேட்போமா?

"சிவாஜிக்குப் பூணூல் அ[ணி]வித்து அவரை க்ஷத்திரியராக்கு[ம்] சடங்கு முடிந்தவுடனே, அடுத்தா[ற்]போல் செய்யப்பட வேண்டி[ய] பணி, ஒரு க்ஷத்திரிய புருஷருக்கு[ச்] சாஸ்திரப்படி தெரிந்திருக்கவேண்டிய மந்திரங்களை அவருக்குக் க[ற்]பிப்பதுதான்.

"பிராமணர்களைப் போலவே க்ஷத்திரியர்களும் புனிதமான துவிஜ குலத்தவர்களே (இருபிறப்பாளர்களே) யாதலால் வேத மந்[தி]ரங்களை உச்சரிக்க பிராமணர்[க]ளுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை க்ஷத்திரியர்[க]ளுக்கும் உண்டு என்றும், தான் இப்போது ஒரு க்ஷத்திரியராக ஆ[க்]கப்பட்டுவிட்டதால் வேத மந்திர[ங்]களை ஓதி உணரும் உரிமை தன[க்]கும் நிச்சயமாக உண்டு என்றும் எனவே ஒரு பரிபூரண க்ஷத்திரி[ய] அரசரின் முடிசூட்டு விழாவின் போது என்னென்ன வேத மந்[தி]ரங்கள் அந்த அரசருக்குச் சொ[ல்]லித் தரப்படவேண்டுமோ அவ்[வ]ளவையும் இப்போது தனக்கு[ம்] சொல்லியாகவேண்டும் என்று[ம்] அதுதான் முறை என்றும் சிவாஜி தெரிவிக்கலானார். அது மிகவு[ம்] நியாயமான கோரிக்கை.

"சிவாஜி இந்த வேண்டுகோளை விடுத்தாரோ இல்லையோ, உடனே விழாமண்டபத்தில் கூடியிருந்[த] பிராமணர்கள் வெகுண்டெழுந்[து] தங்கள் ஆட்சேபக் குரலெழுப்பி[] இந்தக் கலியுகத்தில் உண்மை[] யான க்ஷத்திரியரோ வைசியரோ[] ஒருவர்கூட கிடையாது என்றும் இப்போது க்ஷத்திரியர் வைசிய[ர்] என்று சிலர் சொல்லிக் கொள்[வ]தெல்லாம் வெறும் புரட்டு என்றும் இந்தக் காலத்தில் தப்பி இருக்கு[ம்] ஒரே ஒரு இரு பிறப்பாளர்க[ள்] (பூணூல் அணியும் உரிமை படை[த்]தவர்கள்) பிராமணர்கள் மட்டு[ம்]தான் என்றும், எனவே சிவாஜி யின் வேண்டுகோளுக்குச் செ[வி] சாய்க்க முடியாதென்றும் அழு[த்]தந் திருத்தமாக அறிவிக்கலாயினர்[.]

"சிவாஜியின் கோரிக்கைக்[கு] பிராமணக் கூட்டத்திலிருந்[து]

[12-ம் பக்கம் பார்க்க]

# வாகைமாலை சூடிய வர்ணாஸ்ரம தத்துவம்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவாஜியால்! என்னுடைய உழைப்பால் உருவாகிய உன்னத மாளிகையை நானாளாமல் வேறுயார் ஆள்வது என்று கேட்க முடியவில்லையே! கழனியை உழுது பயிரிடும் உரிமை படைத்த நான் அறுவடையை அனுபவிக்கமட்டும் தகுதியற்றவன் என்று எந்த சாஸ்திரம் கூறுகிறது—கொண்டுவா அதனை நெருப்பிட்டுக் கொளுத்துகிறேன் என்று கூற முடியவில்லையே! அப்படிக்கூறினால் மக்கள் கோபம் தன் மீது பாயும் என்று அஞ்சினனே சிவாஜி! அவன், பிராமணீயத்தின் உறுமலைக் கண்டபிறகு, கூறியதெல்லாம், கூற முடிந்ததெல்லாம், என் சூத்திரப் பிறவி பட்டாபிஷேகத்திற்குத் தடையாக இருக்குமானால், என்னை க்ஷத்திரியனாக அருள் கூர்ந்து மாற்றிவிட மாட்டீர்களா என்ற குழைவு மொழிதானே தவிர, சூத்திரன் ஆனால் என்ன, யாரானால்தான் என்ன, அரசை அமைத்தவன் தானே அரசை ஆள்வதும் நியாயம் என்ற புறநானூறு அல்லவே! வீரன் சிவாஜி, தன்னை சூத்திர நிலையிலிருந்து க்ஷத்திரியநிலைக்கு உயர்த்த வேண்டும் என்று விப்பிரர்களை நோக்கி விண்ணப்பித்துக் கொண்ட அந்த விநாடியிலேயே, சூத்திரனுக்கு நாடாள உரிமை இல்லை — துவிஜ குலத்தவர்க்கு (பூணூல் அணியும் உரிமை படைத்தவர்களுக்கு) மட்டும்தான் அந்த உரிமை உண்டு என்ற ஒரு குலத்துக்கொரு நீதி கூறும் மனுதர்ம சாஸ்திரத்தை—வர்ணாஸ்ரம தத்துவத்தை—மேல் கீழ் ஜாதிமுறையை —பிறவி உயர்வு தாழ்வை—பிராமணீயத்தின் அசைக்க முடியாத செல்வாக்கை அப்படியே ஒப்புக்கொண்டான்—ஒப்புக் கொண்டு தீரவேண்டிய நிலையில் இருந்தான் என்றுதானே பொருள்!

சிவாஜியின் வியர்வைக் கடலிடையே பிறந்த முத்தை சிவாஜியே அணிய வேண்டுமானாலும், ஆரிய குல தலைவர் கங்கு பட்டரின் "அருள்" சிவாஜிக்குக் கிடைத்தால்தான் அது முடியும் என்று ஒரு நிலை இருந்து, அந்த நிலையை ஆற்றல் அரசன்—அடலேறு சிவாஜியும் மீற முடியாமல் இருந்து, கங்கு பட்டரை வரவழைத்து வணக்கமும் காணிக்கையும் செலுத்தினான் என்றால், வர்ணாஸ்ரம தத்துவத்திற்கு — பிரம்மகுல உயர்வுக்கு, செல்வாக்குக்கு இதைவிட அருமையானதோர் வெற்றி வேறென்ன கிடைக்க முடியும்? பிரம்மகுலம் உயர்ந்ததுதான்—ஏனைய குலங்கள் இழிந்தனதான் என்ற பாழும் பிரிவினைத் தத்துவத்தின் மீது பொறிக்கப்பட்ட முத்திரை மோதிரம் எனத் தகும் தன்மையதல்லவா இந் நிகழ்ச்சி! எனவேதான், மராட்டிய ஆரியர் மனம், கங்குபட்டரின் "விமரிசையான விஜயம்" கண்டு இவ்வளவு பூரிப்பும் பெருமிதமும் கொண்டிடலாயிற்று,

திக்கெட்டும் புகழ்படைத்த திட நெஞ்சு படைத்தவனே யானாலும், வர்ணாஸ்ரம முறைக்கு முன்னால் சிவாஜி சிரம் குனிந்தேயாக வேண்டிய இந்த நிலை, எப்போதோ நினைப்புக் கெட்டாத காலத்திலே இருந்ததல்ல—சரியாக 276 ஆண்டுகட்கு முன்னர் இருந்ததுதான்—ஏன்! இப்போதும்கூட இருப்பதுதான்!—எத்தனையோ வீராதி வீரர்கள், பட்டமும் புகழும் அகில உலகப் பெயரும் வாய்ந்தவர்கள், பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியைக் குலுக்கியவர்கள், பேரறிவு படைத்தவர்கள், பொது வுடமை பேசுபவர்கள், என்பவர்களெல்லாம் கூட, இன்றைக்கும், "என்ன இருந்தாலும் ஐயர்வாள் வந்து புரோகிதம் செய்து ஆசிர்வதிக்காவிட்டால் நம்ம குடும்பத்துக் கல்யாணம் சோபிக்காது சார்-நமக்கு எதுக்கு சார் பிராமணத் துவேஷம்" என்று சொல்லத்தானே செய்கிறார்கள் வெட்கமின்றி! அந்தப் "புரட்சி வாசகங்கள்" (!) நம் காதிலேயும் வந்து விழத்தானே செய்கின்றன தயக்கமில்லாமல்! விஞ்ஞான ஒளியும் பகுத்தறிவு இயக்கமும் பரவியுள்ள இந்த நாளில் இந்த நிலை என்றால், 276 ஆண்டுகட்கு முன்னால், இராமாயணமும் மகா பாரதமுமே விஞ்ஞானப் புத்தகமாகவும் சரித்திரச் சுவடியாகவும் இருந்த காலத்தில், வர்ணாஸ்ரமக் கொடி வான் முட்டப் பறந்ததில் வியப்பேது, விசித்திரம்தான் ஏது?

கங்குபட்டர் மராட்டிய புரிக்கு விஜயம் செய்ததும், உடனடியாக சூத்திர சிவாஜியை க்ஷத்திரிய சிவாஜியாகப்புனருத்தாரணம் செய்யும் "புனிதப் பணி"யைத் தொடங்கினாரில்லை. அவ்வளவு விரைவில் தொடங்கி விடுவாரா ஆண்டவன் மட்டுமே செய்யக் கூடியது என்று கருதப்படும் அந்த அற்புதப் பணியை? முதலில், கங்குபட்டர், இந்தியா எங்கணுமுள்ள பிரம்ம குலத்துக் கலைஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் மராட்டிய மண்டலத்திற்கு வந்து சிவாஜியையும் அவருக்கு நடக்கவிருக்கும் பட்டாபிஷேகத்தையும் ஆசிர்வதித்தருளும் படியாக, சிவாஜி அழைப்பிதழ் விடுக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தார், கட்டளை உடனே நிறைவேற்றப் பட்டது. அதன் விளைவாக இந்திய கண்டம் எங்கணும் உள்ள பிரம்ம குல கலா வாணர்களும் சாஸ்திர நிபுணர்களும் மராட்டிய புரி நோக்கி பட்டாளம் பட்டாளமாகப் பயணம் செய்ய லாயினர். சிலநாட்களுக்குள்ளாக, மராட்டிய மண்டலத்தில், ஆரியர் சேனை வெள்ளம் போல் திரண்டு குழுமிவிட்டது.

இந்த சம்பவத்தைப்பற்றி எழுதும்போது, வரலாற்றாசிரியர் ஜது நாத் சர்க்கார்,

"இந்தியாவின் ஒவ்வொரு பகுதியில் உள்ள படித்த பிராமணர்களுக்கும் அழைப்புத் தாள்கள் அனுப்பப்பட்டன. ஏனைய பிராமணர்கள் அழைப்பின்றியேகூட வந்து குவியலாயினர். 11,000 பிராமணர்கள் —அவர்களுடைய பெண்டு பிள்ளை குடும்பத்தோடுசேர்த்து —50,000 பேர், பட்டாபிஷேகம் நடக்கவேண்டிய ரெய்கார் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் அனைவருக்கும் நான்கு மாத காலம், தித்திப்புப் பலகாரங்களுடன் சுவையான உணவு பரிமாறப் பட்டது. அவர்கட்குத் தேவையான சகல வசதிகளையும் சம்பூர்ணமான முறையில் குறை எதுவுமின்றி அமைத்துத் தருவதில் சிவாஜியினுடைய நுண்ணறிவும் அமைப்பு முறைத் திறமையும் பெரிதும் பயன் பட்டன."

என்று புள்ளி விவரங்களுடன், தெளிவாகவே, குறிப்பிட்டிருக்கிறார்.

# உழைக்காத உருவங்கள் பெற்ற உல்லாச வாழ்வு!

50,000 பிராமணர்கள்! அவர்கள் அனைவருக்கும் 4 மாத காலம் உணவு! அதுவும் சாதாரண உணவல்ல! தித்திப்பு வகைகள் விதவிதமாகக் கொண்ட முறையில்! அதுவும் சிவாஜியின் நுண்ணறிவு சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப் பட்டிருக்கும் ஏற்பாடுகளின்படி பரிமாறப் பட்ட உணவு! கேட்க வேண்டுமா, பிறகு: அவர்களின் கொண்டாட்டத்திற்கு!

விதைக்காமல் அறுக்காமல், வெட்டாமல் குத்தாமல், ஓடி ஆடி உழைக்காமல், பாடுபட்டுப் பரிதவிக்காமல், உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்தபடி—உண்ட களைப்பால் உடலில் தோன்றும் வியர்வைத் துளி தவிர வேறு களைப்பால் ஒரு சொட்டு வியர்வை சிந்த வேண்டிய அவசியம் இல்லாமல்—உல்லாச வாழ்வு அறுசுவை உணவுடன் என்றால், யாருக்குத்தான் இனிக்காது! அதிலும் பிராமண குலத்தவர்க்குக் கேட்க வேண்டுமா! பிராமணா போஜனப் பிரியா என்று பழமொழியே இருக்கிறதே!

ஓர் ஆளுக்கு ஒரு நாளைக்குச் செலவாகும் தொகை ஒரு ரூபா என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் கூட, இந்த 50 000 பூசுரர்க்கும் **நான்கு மாத காலம்** உணவு படைக்க குறைந்தது **60 லட்சம் ரூபா** செலவாகியிருக்கும். உணவுக்கு மட்டும் செலவாகும் தொகை இது! அவர்களுக்குத் தங்கும் இடம் தயாரித்தல், குளிப்பது முதலான வசதிகள் செய்தல், தூங்கவும் இருக்கவும் தேவையான தட்டு முட்டு பெட்டி படுக்கை பாய்தலையணை இன்னபிற பொருள்கள் தருதல் முதலான "கடமைகள்" வேறு இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் நிச்சயமாக **மேலும் பல இலட்சங்கள்** செலவாகியிருக்கக்கூடும்!

அடே அப்பா! ஒரு சிவாஜியின் பட்டாபிஷேகத்தால் இவ்வளவு மகத்தான இலாபமா "அந்த ஒரு" கூட்டத்திற்கு என்று ஆச்சரியக் கடலில் மூழ்குகிறீர்களா! ஆச்சரியப்படாதீர்கள் நண்பர்களே, இதற்குள்ளாக ஆச்சரியப் படாதீர்கள்! மேலும் மேலும் நீங்கள் ஆச்சரியப் படவேண்டிய பல அற்புதமான சேதிகள் இனி அடுக்கடுக்காக வர இருக்கின்றன. இந்தச் 'சிறு சேதி'க்கே இப்படி நீங்கள் ஒரேயடியாக வியப்படையத் தொடங்கி விட்டால், பிறகு அந்தப் பல சேதிகளை நீங்கள் எப்படித்தான் கேட்டுணர்வது? ஆமாம், தயவு செய்து, சிறிது நேரம், ஆச்சரியப்படாமல் கேளுங்கள் ஆரியபுரியினர் அன்று பெற்ற கொள்ளை இலாபக் குவியலை!

1974-ம் ஆண்டு மே மாதம் 28ம் நாள், கங்குபட்டர், ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில், **பரிசுத்த சடங்கை** நடத்திவைத்தாராம்!—சிவாஜியும், அவருடைய முன்னோர்களும் இதுவரை சூத்திரர்களாக இருந்ததால் அவர்களுடைய ஆத்மாவின்மீது படிந்துள்ள அழுக்குகளை அகற்றுவதற்காகச் செய்யப்பட்ட சடங்காம் இது! சரித்திராசிரியர் தெரிவிக்கிறார். சிவாஜி இந்தச் சடங்கின் போது, தானும், தன் முன்னோர்களும் இதுவரை க்ஷத்திரிய புருஷர்கள் கடைப்பிடிக்கவேண்டிய கடமைகளையும் தர்மங்களையும் மேற்கொள்ளாமல் இருந்த மாபாவத்திற்காகப் **பிராயச்சித்தம்** செய்து கொண்டாராம், பிறகு, கங்குபட்டர், பல வேத மந்திரங்களைக் கூறி, சிவாஜியைப் பரிசுத்தப் படுத்தி, க்ஷத்திரிய குலத்தவர்க்குரிய பூணூலை அணிவித்து, சிவாஜி! இனி நீ பட்டாபிஷேகம் செய்துகொள்ள சாஸ்திரப்படி ஒரு வித தடையுமில்லை என்று உபதேச காண்டம் வாசித்தருளினாராம், இந்தவிதமாக க்ஷத்திரிய குலத்தவரின் பிறப்புரிமையும் உயர்ஜாதிச் சின்னமுமாகிய முப்புரி நூல் சிவாஜியின் மார்பிலே தவழும்படி செய்யப்பட்டதாம். இவையும் இவற்றின் தொடர்பான இன்னமும் பல ருசிகரமான தகவல்களும் **அறிஞர் ஜதுநாத் சர்க்கார்** தீட்டியுள்ள **சிவாஜி** என்ற சரித்திர ஏட்டிலே நிரம்பிக் கிடக்கின்றன—குறிப்பாக பக்கங்கள் 267—முதல் 282 வரையுள்ள பகுதியில் இந்த நிகழ்ச்சிச் சித்திரம் அழகுபட வரையப்பட்டுள்ளது—நாம் கூறுவதை ஐயுறுவோர் நேரில் படித்துத் தெரிந்து கொள்ளலாம், தடையேதுமில்லை! புத்தகம், எல்லா நூல்நிலையங்களிலும் கிடைக்கும்!!

இந்தப் **பரிசுத்தி சடங்கும்**, இதைத் தொடர்ந்தாற்போல் நடந்தேறிய **பூணூல் அணிவிப்பு விழாவும்** நிகழ்ந்தான பிறகு, பிராமண குலத்தவர்க்கு ஏராளமான தொகை சன்மானமாக வழங்கப் பட்டது. கங்குபட்டருக்கு மட்டும், இந்த இரு சடங்குகளை நடத்தி வைத்தருளிய "மஹா சேவை"க்காக மட்டும், காணிக்கையாகத் தரப்பட்ட தொகை ரூ 35,000. இந்த இரு சடங்குகளின் போதும் தங்கள் மேலான வருகையைத் தந்து "பெரிய மனது வைத்து," ஆசீர் வாதம் புரிந்த பெருங் கருணைத் திருப் பணிக்காக ஏனைய பிராமண சகோதரர்கட்குத் தரப்பட்ட நன்கொடை ரூபா 85,000 **ஆகமொத்தம் இந்த சடங்குகளின்போதுமட்டும் பிராமணகுலத்தவர்க்குக் கிடைத்த இலாபம், ரூபா ஒரு இலட்சத்து இருபதாயிரம்!**

இவ்வளவுதானா அவர்களுக்குக் கிடைத்த இலாபம்? இல்லை, இன்னமும் உண்டு!

"பரிசுத்த சடங்கு"க்கு மறுநாள், தன் வாழ் நாளில் தெரிந்தோ தெரியாமலோ, தான் செய்திருக்கக் கூடிய பாவங்களையெல்லாம்போக்கிக் கொள்வதற்காக சிவாஜி சில பிராயச்சித்த சடங்குகளை மேற்கொண்டான். இந்தச் சடங்குகள் முடிந்ததும்,—நன்றாகக் கவனித்துப் படியுங்கள்—5 **இலட்சம் ரூபாய்** பிராமண குலத்தவர்க்குத் தானம் வழங்கப் பட்டது.

அவர்கள் பெற்ற இலாபம் இந்த அளவோடுகூட நிற்கவில்லை — மேலும் வளர்கிறது—பாருங்கள், இதோ பட்டியலை!

**தங்கம்**
**வெள்ளி**
**செம்பு**
**துத்தநாகம்**
**தகரம்**
**ஈயம்**
**இரும்பு**

இந்த ஏழு உலோகங்களும், தனித்தனியே, சிவாஜியின் எடை

(13-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)